நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

SATS-TECH ENGINEERS

NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை (10.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 235

# இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ

# இலங்கை அரசு தடை விதிக்கிறது

## யு.என்.எச்.சி.ஆர். ஜெனீவாவில் அறிவிப்பு

(ஜெனீவா)

வடக்கின் வன்னி நிலப்பரப்பில் இடம்பெற்று வரும் அரச படை நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவ அரசும் படையினரும் தடை விதித்து வருகின்றனர் என ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய உயர் அதிகாரிகள் குழு வன்னிப் படைத் தளத்திற்கு விஜயம்

(வவுனியா)

பிரித்தானிய உயர் அதிகாரிகள் குழு ஒன்று வன்னியிலுள்ள பாதுகாப்புப் படையினரின் தலைமையகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கான பிரித்தானியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் மார்க் குடிங் உள்ளிட்ட குழுவினரே வன்னியிலுள்ள பாதுகாப்புப்படையினரின் தலைமையகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

வன்னிப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைவரம் மற்றும் மனிதாபிமான விவகாரங்கள் பற்றி ஆராய்வதற் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் கிபீர் தாக்குதல் ஆசிரியர் உட்பட இருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புப் பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது விமானப் படையின் கிபீர் ரக விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஆசிரியர்உட்பட இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர். புதுக்குடியிருப்பு இரணைப்பாலையிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 9.50 மணியளவில் விமானப் படையின் கிபீர் ரக விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தின. இதில் ஆசிரியரான சு.தயாபரன் (வயது-45), க.பசுங்களி (வயது-35) ஆகியோர் படுகாயமடைந்த நிலை யில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர். இதில் 12 வீடுகள் சேதமடைந்துள்ளன. (ந-5)

# வவு.வில் படையினர் மும் முனை நகர்வு முறியடித்ததாகப் புலிகள் அறிவிப்பு

## நேற்று மட்டும் 11 படையினர் பலி; 20 பேர் காயம்

வவுனியா மாவட்டத்திலுள்ள பாலமோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம் வரையான பகுதிகளில் மூன்று முனைகளில் படையினர் நேற்று மேற்கொண்ட முன்னகர்வுகள் தம்மால் முறியடிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இதில் 15 படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 29 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். பாலமோட்டை. நவ்வி, குஞ்சுக்குளம் வரையான பகுதிகளில் நேற்றுக் காலை 7.10 மணிமுதல் மாலை 6 மணிவரை மூன்று முனைகளில் படையினர் செறிவான எறிகணைத் தாக்குதலுடன் முன்னகர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தமது தீவிர எதிர்த் தாக்குதலின் மூலம் இம் முன்னகர்வுகள் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 11 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 20 படையினர் காயமடைந்துள்ளனர். படையினரிடமிருந்து படைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை பாலமோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம் வரையான பகுதிகளில் நேற்று முன்தினமும் மூன்று முனைகளில் படையினர் மேற்கொண்ட முன்னகர்வுகள் முறியடிக்கப்பட்டன.

இதில் 4 படையினர் கொல்லப்பட்டனர். 9 பேர் காயமடைந்தனர் எனவும் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ந-5)

# புலிகளின் முகாம்கள் மீது விமானத் தாக்குதல்கள்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பிரதேசமாகிய வன்னிப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீது வெள்ளிக்கிழமை நள்ளிரவிலும் சனிக்கிழமை காலையிலும் விமானப் படையினர் வான் வழித் தாக்குதல்களை நடத்தி விடுதலைப்புலிகளுக்குச் சேதம் ஏற்படுத்தியிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்திருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புக்கு மேற்கே 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள விசுவமடுப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய தளம் ஒன்றின் மீது நேற்றுக் காலை 10 (12 ஆம் பக்கம் பார்க்க)

## மடு மாதா திருச்சொரூபம் மீண்டும் மடுத் தேவாலயத்தில்

(மன்னார்)

மன்னார் ஆயர் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மடு அன்னையின் திருச்சொரூபம் மடுத் தேவாலயத்திற்கு நேற்று மாலை எடுத்துச் செல்லப்பட்டு கொலுவேற்றப்பட்டுள்ளதாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் மடுத் திருப்பதியில் இருந்து தேவன்பிட்டிக்குப் பாதுகாப்புக்காகக் கொண்டு செல்லப்பட்டிருந்த மடு அன்னையின் திருச்சொரூபம் சில வாரங்களுக்கு முன்னர் ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாக மன்னார் ஆயர் இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டு அங்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலில் பொதுமகன் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிப் பகுதியில் படையினரின் எறிகணைத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

வன்னேரி பகுதியை நோக்கி நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் படையினர் செறிவான எறிகணைத் தாக்குதலை நடத்தினார்கள் எனவும் இதில் திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வன்னேரியில் தங்கியிருந்த சின்னத்தம்பி அருளானந்தம் (வயது-48) என்பவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (ந-5)

# ஐ.நா. ஊடாக போர் நிறுத்தத்திற்கு விடுதலைப்புலிகள் முயற்சியாம்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையூடாக விடுதலைப் புலிகள் உடனடி போர் நிறுத்தத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அரசாங்கத்தின் பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட்7ஆம் திகதி விடுதலைப் புலிகள் ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்த வேண்டுகோளை அனுப்பி வைத்துள்ளதாகவும், இது தொடர்பாக ஐ.நா. இலங்கை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கப் படைகள் கிளிநொச்சியிலுள்ள தமிழ் மக்கள் மீது இரு முனைகளில் தாக்குதல்களை தொடுத்துள்ளதாக விடுதலைப் புலிகள் தமக்கு அறிவித்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

# சொக்ஸி சந்தர்ப்பம் தர மறுத்தால் வேறு வழியில் நாடாளுமன்றம் செல்வேன்

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்குச் செல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் கே.என்.சொக்ஸி சந்தர்ப்பம் வழங்காவிட்டால் வேறு வழியில் நாடாளு மன்றத்திற்குள் செல்ல நடவடிக்கை மேற் கொள்வதாக எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தின்போது இந்த விடயங்கள் குறித்து கே.என்.சொக்ஸியுடன் கலந்துரை யாட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

இதேவேளை எஸ்.பி.திஸாநாயக்கவிற் குச் சிவில் உரிமைகள் மீண்டும் வழங்கப்பட வேண்டும் எனவும் அவருக்கு நட்டஈடு வழங் கப்படவேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை இலங்கை அர சாங்கத்திற்கு அறிவித்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (ந-5)


வெளிநாட்டில் உள்ளவர்களுடன் முகம் பார்த்து கதைப்பதற்கு நவீன வசதிகளுடன்

Internet Browsing




ஐக்கிய அரபு நாடுகளுக்கு 35/=

Internet Call 7/=

இந்தியாவிற்கான அழைப்பு 10/=

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
45, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


# மரண அறிவித்தல்

## புலவர் மணி, பண்டிதர்

## கதிரேசு மயில்வாகனனார்

## (சிந்துபுரம், வட்டு.மேற்கு)

சிந்துபுரம், வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரேசு வள்ளியம்மை தம்பதியினரின் மகனும் அமரர் முருகுப்பிள்ளை அன்னம்மா தம்பதியினரின் மகளான பத்மாசனியம்மாவின் அன்புக்கணவரும்,

காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு, மாணிக்கவாசகர், முருகுப்பிள்ளை, கனகம்மா, பாத்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நல்லம்மா, தெய்வானைப்பிள்ளை, சிரஞ்சீவி, இராசாத்தியம்மா, அமரர்களான வல்லிபுரம், நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் இந்திரா, சாரதாதேவி (திரு), தயானந்தன் (பாபுஜி), சிவானந்தன் (சிவா), திருக்கேதீஸ்வரி (உமா), முருகானந்தன் (ரவி), மகேசானந்தன் (சந்திரன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்,

யோகானந்தசிவம், தங்கவடிவேல், ஜெயலக்சுமி, ராகினி, கணேஸ்வரன், ஜெய ரஞ்சினி, சந்திரகலா ஆகியோரின் மாமனாரும் சேந்தன்,சுலோசினி, குமரன், விசாகன்,சிவகௌரி, சங்கர், கஜானந்தன், தீபா,கதிரேசன், கோபிரமனா, நித்தியா, நிஷாந்தன், தமிழினி, ராம்கிருஸ்ணா, பாக்கியா, தாட்சாயினி, விதுஷன், மயூரேசன், பவித்திரன், ஜெயகரன், கோபினா, அரவிந்தன் ஆகியோரின் பேரனும் கர்சனா, கர்சினி, சிவானுசன், சிவதர்சினி, மயூரி, கோபிகன், கிருஸ்ணிகா ஆகியோ ரின் பூட்டனுமான

**ஓய்வு பெற்ற அதிபரும், கலாபூசணம் ,நாற்கவிராசன், புலவர் மணி, பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் அவர்கள்**

சனிக்கிழமை (2008.08.09) காலை 10.30 மணியளவில் இறைவனடி சேர்ந் துள்ளார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 2008.08.11 ஆந் திகதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக் காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், அன்பர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**ம.தயானந்தன்(பாபுஜி)**
**மகன்**
**(கி.உத்தியோகத்தர்;**
**பிரான்பற்று தெற்கு,சில்லாலை)**

**சிந்துபுரம்,**
**வட்டு.மேற்கு,**
**வட்டுக்கோட்டை.**

(C-1395)

# ஏனைய மாகாண சபைகள் செப்ரெம்பரில் கலைப்பு!

(கொழும்பு)

மேல் மாகாணசபை உள்ளிட்ட ஏனைய மாகாண சபைகளும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் கலைக்கப்படவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி அல்லது 15ஆம் திகதி எஞ்சியுள்ள அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்படக் கூடும் என லக்பிம நாளேடு செய்தி வெளியிட்டுள் ளது.

மேல், வடமேல், மத்திய, ஊவா மற்றும் தென் மாகாண சபைகளின் உத்தியோக பூர்வ ஆட்சிக்காலம் எதிர்வரும் ஆண்டில் நிறைவுபெறவுள்ளது.

குறித்த ஐந்து மாகாணசபைகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு பெரும்பான்மை பலம் இல்லாத காரணத்தி னால்;

அரசாங்கம் குறித்த மாகாண சபை களைக் கலைப்பதற்குத் தீர்மானித்துள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

(ந-5)

## உதைபந்தாட்டப் போட்டி

(பருத்தித்துறை)

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15-வது ஆண்டு நிறைவை யொட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின்இன்றைய போட்டியில் பிற்பகல் 3.30 மணிக்கு வதிரிடை மனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற் றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மும் பிற்பகல் 4.30 மணிக்கு வதிரி பெர மோஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக மும் மோதுகின்றன.

(5)

# 6 விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமிழகப் பொலிஸாரால் கைது

(சென்னை)

ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்க ளையும் அவர்களுக்கு உதவியளித்தவர்கள் சிலரையும் தமிழ்நாட்டு கியூ பிரிவு பொலி ஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய் துள்ளனர்.

கடந்த யூலை 30 ஆம் திகதி தமிழ்நாடு இராமேஸ்வரத்துக்கு அருகில் 26 அசிட் திரவக போத்தல்களை விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக கடத்த முயற்சித்தார்கள் எனும் குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதா்க கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் மீள வும் தமது வலையமைப்பினை உருவாக்க முயற்சிப்பதாக குறிப்பிட்டுள்ள பொலிஸார் அதனைத் தடுப்பதற்காக மேற்கொள் ளப்பட்டுவரும் முயற்சிகளின் ஒரு கட்டமாக வே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி வெடி மருந்துகளை தயாரிக்க உபயோகிக் கப் பயன்படும் பொருட்களை கொள்வனவு செய்த இரு இலங்கை இளைஞர்களையும் கியூ பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ள னர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த இரு இளைஞர்களும் கைது செய்யப்படும்போது வெடிக்க வைப்பதற்குப் பயன்படும் 1.5 கிலோக்கிராம் பொட்டாசியம் நைட்ரேட் தூள்கள், சூரியகலம், இணைப்புக் கம்பிகள் என்பவற்றை வைத்திருந்ததாகவும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

(ந-5)


**உடன் தேவை**

**பெண்களுக்கான உள்ளாடை (BRA) தைப்பதற்கு அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் உடன்தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**SUN STAR GARMENTS**
**56/14 ஆத்திசூடி வீதி,**
**கந்தர்மடம்.**
**T.P :-0774415300**

(C-1389)


## ஏறாவூர் வர்த்தகரை காணவில்லை

(கொழும்பு)

ஏறாவூர் தமிழ் வர்த்தகர் ஒருவர் கொழும்பில் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வட்டவளையில் கடை வைத்து வசித்து வந்த நகை வியாபாரியான சண்முகம் காளிதாஸ் (வயது 38) என்பவரே நேற்று காணாமல் போ யுள்ளவராவார்.

இவர் வீடு திரும் பாமை கண்டு பொ லிஸில் அவரது மனைவி முறைப் பாடு செய்துள் ளார்.

இதேவேளை இவ்வருடத்தில் இது வரை 200 பேர் காணாமல் போ யுள்ளதாகத் தெரி கிறது.

அவர்களில் ஒருவர் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார்.

(ந-5)


உள்நாடு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்

கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.



உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

குறிப்பு:- அனுப்பப்படும் ஒவ்வொரு பொதிகளிற்கும் காப்புறுதி உண்டு

**திருமண சேவை**

தற்பொழுது திருமண சேவையில் முன்னணி வகிக்கும் இலவச திருமண சேவையாகிய Tamilmatrimony.lk இணையம் இணைய வசதி இல்லாதவர்க ளையும் அரவணைக்கிறது. உங்களின் விபரங்களை பதிவு செய்ய விரும்பின் மணமகள்/மணமகனின் முழுவிபரத்துடன் (விரும்பினால் படத்துடன்) அனுப்பு பவரின் தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு பிரதியுடன் மணமகள்/மண மகனிற்கு உறவுமுறையையும் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

தொலைபேசி 0774533600
மின்னஞ்சல்:-info@tamilmatrimony.lk
(தொலைபேசி/மின்னஞ்சல்/கடிதத் தொடர் புகள் மட்டும்)

TAMIL MATRIMONY
C/O Mr.T.THURAISINGAAM
8,5/1, HAMTDEN LANE
COLOMBO-00600

(1511)

## நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சிறப்புச்சொற்பொழிவும், கூட்டுப்பிரார்த்தனையும்

(நல்லூர்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடாத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி முதல் 6 மணிவரை "திருமுறையும் வாழ்வும்" எனும் விடயம் பற்றி ஆசிரிய ஆலோசகர் பா. பாலசிங்கம் (எம்.ஏ) சொற்பொழிவாற்றுவார்.

அத்துடன் மூளாய் ஞானஒளி அறநெறிப் பாடசாலை மற்றும் சில்லலை முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை "நாயன்மார் காட்டிய நன்நெறி" எனும் விடயம் பற்றி பேராசிரியர் சண்முகதாஸின் சிறப்புச் சொற்பொழிவும், ஆவரங்கால் அருள்முருகன் அறநெறிப் பாடசாலை மற்றும் கொக்குவில் தலையாழிஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (ஓ)

## ஸ்ரீஅம்மா பகவான் ஆரோக்கிய பூஜை

(நல்லூர்)

நல்லூர் உற்சவ காலங்களில் ஸ்ரீகல்கி சுவர்ணயுக அமைப்பகத்தின் யாழ் கிளையினால் செட்டித் தெருவில் அமைந்திருக்கும் நல்லூர் முருகன்சனசமூக நிலையத்தில் தினமும் மாலை 5.30 முதல் 6.30 வரை ஸ்ரீஅம்மா பகவான் மூல மந்திர பூஜை தொடர்ந்து நடாத்தப் பெற்றுவருகின்றது. இவ்விடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணி முதல் 3.30 மணிவரை ஆரோக்கிய பூசை நடைபெறுமென ஸ்ரீகல்கி ஆன்மீக மையத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

## அலங்கார உற்சவம்

அச்சுவேலி தோப்பு அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது. (அ)

## நிதிமுகாமைத்துவக் கருத்தரங்கு

எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் காலை 8.30 தொடக்கம் 1 மணிவரை கீழ்க் குறிப்பிடும் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான நிதி முகாமைக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதில் தவறாது பங்கு பற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதிஅ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

- கொக்குவில் இந்துக் கல்லூரி
- கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்தி.
- கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.
- கொக்குவில் ஞான பண்டிதா வித்தி.
- கோண்டாவில் இந்து மகா வித்தி.
- கோண்டாவில் ராமகிருஷ்ணா வித்தி.
- கொக்குவில் ஸ்தான சி.சி வித்தி.
- கொக்குவில் மேற்கு C.C.T.M.S
- கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.
- கோண்டாவில் றோ.க.த.க வித்தி.
- நல்லூர் ஞானோதயா வித்தி. (ஓ)

## ஆங்கிலதின விழாவும் கலைவிழாவும்

பிரிட்டிஷ் பிசினஸ்(British Business) பாடசாலையின் வருடாந்த ஆங்கில தினவிழாவும் கலை விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் பல்கலைக் கழக ஆங்கில மொழிப் பகுதிப் பீடாதிபதியும் விரிவுரையாளருமான எஸ்.சுந்தரேசன் தலைமையில் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெற உள்ளது. (இ)

## விளையாட்டுவிழா

(பருத்தித்துறை)

திக்கம் மத்திய சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா சுரோம்படி வைரவர் ஆலய மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலைய தலைவர் கே. சிவசோதி தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய அழகியல் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜ. ஜிராஜசீலன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வி.சிவராஜலிங்கம், டாக்டர் ஆர். கனகலிங்கம், பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. முருகையா, வலி கிழக்கு பிரதேசசபை நூலகர் திருமதி ஆர். இராசநாயகம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.யோகராஜா, அதிபர் வி. வினாயகமூர்த்தி, முன்பள்ளி இணைப்பாளர் திருமதி எஸ்.சதாயினிமலர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். சனசமூக நிலையச் செயலாளர் பி. விஜயேந்திரன் நன்றியுரை நிகழ்த்துவார். (இ-52)

## விளையாட்டு விழாவும் சிறுவர் பூங்கா திறப்புவிழாவும்

துன்னாலை கோவிற்கடவை சித்தி விநாயகர் முன்பள்ளி விளையாட்டுவிழாவும் சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை கோவிற்கடவை சனசமூக நிலையத் தலைவர் எஸ். உருத்திரகுமார் தலைமையில் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், கரவெட்டி பிரதேசசபைச் செயலாளர் வி. குலநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-52)

# நாட்டிய சிறப்பியல் பார்வையில் குருவின் மேன்மைத்துவம்



ருக்மணிதேவி

(சென்றவாரத் தொடர்ச்சி)

சம்பிரதாயங்களோடு சமரிட்டுவரும் இந்த நவயுக காலப்பகுதியில் கலைகளைப் பொறுத்த வரையில் பண்பாடு, கட்டுக்கோப்பு என்பவை மாறாது செயற்படுவதற்கு வழிவகுக்கின்றன எனலாம். எத்துறையிலும் பெரும்பாலும்



காணப்படாத ஒரு சிறப்பம்சம் கலைத்துறையில் அவசியமாகவும் அவசரமாகவும் இருக்க வேண்டும். அதுவே குருபக்தி. கலைகளை நல்ல முறையில் கற்றுக் கொள்வதற்கு குருகுல வாழ்வியல் முறைகள் நமக்கு வழிசமைக்கின்றன. "குரு இல்லா வித்தை பாழ்" என்பது ஆன்றோர்வாக்கு. குருவருள் இல்லாவிடின் எந்தவொரு காரியமும் வெற்றிபெறாது. ஏதாவது ஒரு தடங்கல் ஏற்பட்டு நின்று விடும். குருவருளைப் பற்றிய பேருண்மை அதை உய்த்து உணர்ந்தவர்களுக்கு மட்டுமே புரியும். திருவருளால் சாதிக்க முடியாததையும் குருவருள் சாதிக்கும் என்பார்கள். மேலும் திருவருளை பெறவும் துணைபுரிவது குருவருளே யாகும்.

*ஆபர்த3 மௌளி ப1ரியந்த1ம் கு3ரூணாம் ஆக்1ருதி1ம்*
*தே1ன விக்4னா ப்ரணஸ்யந்தி1 சித்யந்தி1ர மனோரத்த2 க;*

குருவின் பாதம் முதல் தலைவரையில் உள்ள குணாதிசயங்களை நினைத்து புளகாங்கிதம் அடைகின்ற சீடர்கள் தொடங்கும் காரியங்கள் எத்தகைய தடங்கல்களும் வராது. சீடர்கள் தொடங்கிய காரியம் வெற்றி அடைவதில் சந்தேகமே இல்லை என்பது மேலே தரப்பட்டுள்ள ஸ்லோகத்தின் பொருளாகும்.

ஒரு காரியம் தொடங்குவதற்கு முன் அது பற்றி குருவுடன் கலந்தாலோசித்து தொடர்வதையே முன்னைய காலத்தில் மன்னர்கள் பின்பற்றி வந்தனர். இதுவே சிறந்த குரு பக்தியாகும். இதனால் மன்னர்களுக்கு வந்த மாபெரும் தடங்கல்கள் நிவர்த்தியாவது மட்டுமன்றி பல்வேறு சமயங்களில் பல சாம்ராஜ்யங்கள் பேரழிவில் இருந்தும் காப்பாற்றப் பட்டன. மேலும் பல சாம்ராஜ்யங்கள் தோன்றவும் செய்தன. குப்த சாம்ராஜ்யம் சந்திர குப்தரின் குருவான "சாணக்கியரின்" ஆலோசனையால் தோன்றியது என்பது இங்கு குறிப்பிடவேண்டிய ஒரு விடயமாகும்.

ஒரு குருவானவர் கலைகளையும் சத்வித்தைகளையும் போதித்து நம்மிடையே உள்ள அறியாமையை நீக்கி உலகம் மதிக்கின்ற அளவில் ஞானஒளியை நம்முள் ஏற்றி நம் எல்லோரையும் அவரே மாற்றி அமைக்கின்றார். நமது அறிவொளி சுடர்விட்டு நம்மை காண்பவர்கள் அனைவருமே இவனும் ஒரு போற்றத்தக்க மனிதன் என்று நம்மை ஆசீர்வதிப்பவர்களே ஆசிரியர்கள் ஆவார்கள். உலகத்தின் எந்தவொரு மூலையிலும் இருக்கின்ற மஹாத்மாவாக இருந்தாலும் தமது குருவை நினைக்காமல் எந்தவொரு காரியத்தையும் தொடங்க மாட்டார்கள். உலகில் எத்தனையோ கலைகள் குரு மூலமாய் பயிலப்பட்டு வந்தாலும் நாட்டிய உலகில் மட்டும் குருநாதருக்கு பிரத்தியேகமாக ஒருவித மதிப்பும் மரியாதையும் உள்ளது. வட மொழியில் 'கு' என்றால் அறியாமை. 'ரு' என்றால அந்த அறியாமையைப் போக்ககூடியவர் என்பது பொருளாகும்

*கு3க1ாரஸ்த்1வந்த4 க1ாரஸ்ச ருகாரஸ்த1 ந்நிரோத4 க*
*அந்த4கார நிரோத4த்வாத்1 கு3ருக்தோ மநீஷிபி4*

குருவின் மூல மாக நாம் எந்த அள விற்கு வேண்டுமா னாலும் படித்து தெரி ந்து கொள்ளலாம். அந்த குரு எப்படி இருக்க வேண்டும்.



*அஸ ம்ஸய;*
*ஸம்யயச்சீ த்*
*கு3 ருருக் தோ1*
*மநீஷிபி4*

எந்த விடயத்திலும் தனக்கு சந்தேகம் வராமல் அதே சமயத் தில் பிறருக்கு குறிப்பாக தன்னிடம் பயில்கின்ற மாணவர்களுக்கு ஐயப்பாடு வந்தால் அதனை உடனேயே போக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும். இப்படிப்பட்டஅறிஞர்களே குரு என்ற சொல்லுக்குப் பொருத்தமானவர்கள். ஆதலால் இத்தகைய திறைமையைக் கொண்ட குரு மார்களை இறைவனுக்கு இணையாகவே கொண்டாடலாம்.

குருவின் மூலமாக எந்த அளவிற்கு வேண்டுமானாலும் நாம் படித்துத் தெரிந்துகொள்ளலாம். அந்தக் குருவானவர், எந்த விஷயத்திலும் தனக்கு சந்தேகம் வராமலும் அதே சமயத்தில் தன்னிடம் பயில்கின்ற மாணவருக்கு ஐயப்பாடு வந்தால் அதனை உடனேயே போக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட அறிஞர்களே "குரு" என்ற சொல்லுக்குப் பொருத்தமானவர்கள். இத்தகைய மேன்மை கொண்ட குருவின் பெருமையை முன்னைய காலங்களில் பலரும் பலவிதங்களில் கூறிய ஆற்றலை இனிப் பார்ப்போம்

*யஸ்ய தே3வே ப1ராப4க்தி; யத2 ,, தே3வே த்த2 ,,குசௌ*

பக்தர்கள் இறைவனிடம் எவ்வளவு பக்தியைச் செலுத்துவார்களோ அதே அளவிற்கு குருவிடமும் பக்தியைச் செலுத்தவேண்டும் என்று மஹாதத்துவ ஞானியான ஸ்ரீ மத்வர் கூறியுள்ளார்.

*கு3 ருவின கு3லாம நாகு வதனக தெ3ாரெய தண்ண முகதி*

இதன்பொருள் குருவிற்கு தொண்டு செய்கின்ற தெண்டனாகாமல் உனக்கு முக்தி என்பது இடையூறு என்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர். இங்கு முக்தி என்பது மோக்ஷம். அதாவது மன நிம்மதி எனபதாகும்.

*கு3ரு லேக1 எடுவண்டி கு3 ணிகி தெ1லியக1 போது*

இதன் பொருள் எப்படிப்பட்ட ஞானியாக இருப்பினும் குருவின் வழிகாட்டுதல் இல்லாது கலைகளின் நுணுக்கத்தை அறிந்துகொள்ள இயலாது என்பது ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் கருத்தாகும்.

*கு3ரு பினா3 அஞ்ஜனி ப1ாயோ மேரா ப4ாயி*

குருவில்லாது எந்த ஞானமும் வராது என்று கபீர்தாஸ் அவர்கள் கூறியுள்ளார். இராமர் தனக்கு தரிசனம் தந்தார் என்றால் அதற்கு எனது குரு நாதர் காட்டிய வழிதான் காரணம் என்கிறார். ஆதலால் ஒவ்வொரு மஹானுபவாங்களும் குரு வின் பாதக் கமலங்களைச் சரண டைந்தால் முக்தியும் சித்தியும் கிடைக்கும். அதனால் குருவை பணிகின்ற மார்க்கத்தைப் பின்பற்றுங்கள் என்று கூறுகின்றனர். உலகில் உள்ள எந்தப்பொருளை வேண்டுமானாலும் விலைகொடுத்து வாங்கி விடலாம். ஆனால் நல்ல குருவை மட்டும் பணத்தால் விலைக்கு வாங்கி விட முடியாது. இதற்கு பூர்வஜன்ம புண்ணியமும் நமது பெற்றோர்கள் செய்த யோக மற்றும் தவபலனுமே மூலகாரணங்கள் ஆகும். இந்த கருத்தை பக்தசிரோன்மணி ஸ்ரீ ஊத்துக்காடு வேங்கட சுப்பையர் பின்வருமாறு கூறுகின் றார்.

*என்ன புண்ணியம் செய்தேனோ சற்குருநாதா*
*எத்தனை தவம் செய்தேனோ நின் அருள்பெறவே*
நல்லகுருநாதனைப்பெற என்னபுண்ணியம்

மற்றும் எத்தனை தவம் செய்தேனோ என்று தானடைந்த பேற்றிற்காக தனது குருவிற்கு நன்றி கவிதையைப் படைக்கிறார்.

கல்வியோ, கலையோ நாம் பயில்கனிற வேளையில் அவற்றின் நுட்பங்களை துல்லியமாக அறிந்துகொள்ள இயலாது. கலையைப் பொறுத்தவரையில் அவற்றை நாம் பயில்கின்ற காலத்தில் அவை பற்றி அறிவைப் பெறுகின்றோம். தவிர அவற்றில் மேதா விலாசம் பெறுவதில்லை என்றே சொல்ல வேண்டும்.

கற்ற கலையை சீர்மைப்படுத்தி நல்ல முறையில் அவைக்காற்றுகையாய் நடைமுறைப்படுத்துவதிலும், அனுபவம் வாய்ந்த திறமை மிக்க பல கலைஞர்களின் கலை நிகழ்வுகளை நேரடியாக சென்று பார்வையிடுவதிலும், மாணவர் களுக்குப் பயிற்றுவிப்பதிலும், பல அனுபவசாலி களின் அனுபவங்களை கேட்டுப் பகிர்ந்து கொள் வதிலுமேஓரளவு திருப்தியும், முழுமையும் கிடைக்கிறது. சங்கீதம், நடனம் இரண்டையும் பொறுத்த வரையில் குருவிடம் இருந்து கற்ற லில் மாத்திரம் நமது வெற்றி இலக்கு தங்கி நிற்கவில்லை.

குருவிடம் பயிலும்போது அடிப்ப டைத் தார்ப்பரியம் கலைகளில் எம்மால் பெற முடிகிறது. அது தக்க சமயத்தில் நாம் கற்றுணர்ந்ததை குறித்து சிந்தித்து கடின உழைப்பால் எமது உடலுடன் இயல்பாக இணையச் செய்ய வேண்டும். எமது கடின உழைப்பிலேயே பெரும்பகுதி வெற்றி அமைந்துள்ளது என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. மேலும் குரு கற்பித்த வித்தையின் அடிப்படைத் தன்மை மாறாது சில புதுமைகளை கொண்டு வருவதில் தப்பில்லை. ஆனால் அடிப்படை தன்மை மாத்திரம் மாறக்கூடாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**திருமதி பிரஷாந்தி உதயபாபு**
**(அடையாறு கலாசேஷத்ரா)**
**தற்காலிக நடன விரிவுரையாளர்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

எனவே நாட்டியக் கலையைப் பொறுத்தவரையில், குரு சிரத்தை, குருபக்தி என்பன மாணவர்களிடம் இயல்பாக ஏற்படுமிடத்து அவர்களுக்கான ஆற்றுப்படுத்தலும் குருமூலம் நல்லமுறையாக அமையும்.

குருகுல க்ஷேத்திரங்கள் மூலம் கலைகளைப் பயில்வதில் ஆத்ம திருப்தி கிடைக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த வகையில் குருபக்தி இருக்கும் இடத்தில் நிச்சயமாக குருவின் திருவருள் வரப்பிரசாத மாகக் கிடைக்கும்.

*"கல்விக் கழகு கசடறக் கற்றல்*
*கல்விதன் பயனோ கசடறக் கற்பித்தல்"*

# கலைஞர் படத்தில் சுந்தர்சி –சினேகா மீண்டும் "இளவேனில்" காலம்



முதல்வர் கலைஞர் கதை வசனத்தில் உருவான உளியின் ஓசை வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது.

இதையடுத்து அவர் எழுதிய சுருளி மலை என்ற மற்றொரு நாவலை படமாக்க போகிறார்கள். உளியின் ஓசை படத்தை இயக்கிய இளவேனில் இப் படத்தை இயக்குகிறார்.

1957ஆம் வருடம் இந்த நாவலை எழுதியிருக்கிறார் கலைஞர் சாரப்பள்ளம் சாமுண்டி. என்றநாவல் எப்படிஉளி யின்ஓசை ஆனதோ அதைப்போலவேஇதையும் சினிமாவாக்க ஆர்வம் கொண்டிருந்தார் இளவேனில். கிராமத்து பள்ளிக் கூட ஆசிரியருக்கும் அந்த ஊர் பெண்ணிற்கும் ஏற்படுகிற காதலை மையமாக கொண்ட இந்த கதையில் ஹீரோவாக நடிக்க சுந்தர்சி சம்மதித்திருக்கிறாராம். கதாநாயகியாக சினேகா நடிப்பார் என்று தெரிகிறது.படத்தை சீமான் டுடோரியல் என்ற கல்வி நிறுவனத்தை நடத்தி வருபவரும் தி.மு.க பிரமுகருமான சீமான் தயாரிக்கிறார். அடுத்த மாதம் கோலாகலமாக படத் துவக்கம் நடைபெற இருக்கிறது.

# அஜித் மீண்டும் இரட்டைவேடம்!



அஜீத் ரசிகர்களுக்கு இன்னுமொரு சந்தோஷ செய்தி. மீண்டும் ஒருஇரட்டை வேட ரீமேக் கதையில் நடிக்கிறார் அஜீத் .

தற்போது ஏகன் திரைப் படத்தில் நடித்து வரும் அஜீத் சிவாஜி பிலிம்ஸ் மற்றும் சௌந்தர்யா ரஜினிகாந்தின் சொந்தப் படம் பில்லா–2 ஆகிய வற்றை முடித்து விட்டு அசோக் அமிர்தராஜின் படத்தில் நடிக்க உள்ளார்.

இதற்காக இந்தியில் சைப் அலிகான் –அக்ஷய கன்னா நடித்த சூப்பர்ஹிட் படமான ரேஸ் படத்தை ரீமேக் செய்கிறார்கள் .

முதலில் இந்தப் படத்தை இரு கதாநாயகர்கள் கொண்ட படமாக எடுக்கவே விரும்பினாராம் அசோக்அமிர்தராஜ். ஆனால் படத்தைப் பார்த்த அஜீத் தானே இரு வேடங்களிலும் நடிப்பதாக தெரிவித்துவிட்டதால் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டாராம் அசோக் .

இந்தப் படத்தின் நாயகி மற்றும் இதர தொழில்நுட்பக் கலைஞர்கள்பற்றிய விவரம் இன்னும் வெளியிடப்பட வில்லை.

தற்போது அஜீத் நடிக்கும் ஏகன் படம் ஷாருக்கானின் மேஹூன் நாவின் தழுவல் .

# அட்வான்சை திருப்பிக் கொடுத்த ஸ்ரேயா



பொல்லாதவன் படத்தை தயாரித்த பைவ்ஸ்டார் கதிரேசனுக்காக மீண்டும் ஒருபடத்தில் நடிக்க சம்மதித் திருந்தார் தனுஷ்.

இப்படத்தையும் வெற்றி மாறனே இயக்குவதாக இருந்தது. இதில் நடிக்க ஸ்ரேயாவை அனுகி அட்வான்சும் கொடுத்திருந்தார் கதிரேசன். ஆனால் மார்ச்சில் துவங்க வேண்டிய படம் இன்னும் துவங்கப்படவில்லை. ஏப்ரலில் இருந்து இந்தப் படத்திற்கு கால்ஷீட் கொடுத்திருந்த ஸ்ரேயா தனது கால் ஷீட்டுகள்வேஸ்ட்ஆவதால்வாங்கிய அட்வான்சை உடனடியாக திருப்பிக் கொடுத்துவிடுவது என்றுமுடிவெடுத்துள்ளாராம். ஸ்ரோயா விசாரித்த வரையில் தனுஷ் இந்தப் படத்தில் நடித்து கொடுப்பதற்கு முன் இரண்டுபடங்களில் நடிக்க வேண்டியிருக்கிறது. அதுவரை தான் காத்திருக்க முடியாது என்பதால் பணத்தை நேரடியாக நடிகர் சங்கத்திற்கு அனுப்பி விட்டாராம்.

# விஜய்யுடன் ஆட மறுத்த நமிதா



ஒரு பாடலுக்குஆடுவதில்லை என முடிவெடுத்துள்ளார் நமிதா.

விஜய்யுடன் அழகிய தமிழ்மகன், அஜித்துடன் பில்லா என இருடாப் ஹீரோக்களின்படத்தில் தன்னை தொட்டுக்க ஊறுகாய் அளவுக்கே பயன்படுத்தியதில் நமிதாவுக்கு வருத்தம். போஸ்டர்களில்கூட இவர் முகத்தை போடவில்லை. இதனால் ஒரு பாடலுக்கெல்லாம் ஆடுவதில்லை என்று புதிய கொள்கைமுடிவெடுத்துள்ளார்.

எத்தனை நாளைக்கு இது நீடிக்கும் என்பது வேறு விஷயம்.

இந்த திடீர் கொள்கைப்படி விஜய்யுடன் ஆடமறுத்தாராம் நமிதா.

வில்லு படத்தில் வரும் குத்துப் பாட்டு ஒன்றுக்கு நடிக்க பிரபுதேவா தரப்பிலிருந்து நமிதாவை அனுகியதாகவும் நமிதா ஒருபாடலுக்கெல்லாம் ஆடுவதில்லை என மறுத்ததாகவும் தகவல்!

# சினி விமர்சனம்

நடசத்திரங்கள்:– தலைவாசல் விஜய், சோனா , போஸ்வெங்கட மற்றும் பலர்

இயக்கம் :–சத்யம்




கடிகார முள் பத்துக்கு வரும்போது நடக்கிற ஒரு கொலையும் அதை யொட்டிய விசாரணையும் தான் கதை. கடைசி வரைக்கும் கொலைகாரன் யார் என்பதை நம்மால் யூகிக்க முடியாதபடி திரைக்கதை அமைத்த இயக்குநர் சத்யமுக்கு ஒரு ஷொட்டு!

சினிமா இயக்குனர் தலைவாசல் விஜய். கூவம் அருகில் ஒரு சூட்கேசில் பிணமாகக் கிடக்கிறார். விசாரணையை துவங்கும் இன்ஸ்பெக்டர் போஸ்வெங்கட. மெல்ல மெல்ல கொலையாளியை நெருங்குவதற்குள் திருவல்லிக்கேணியின் முட்டுசந்துகளை போல் திடுக் திருப்பங்கள். அதில் சோனாவின் எபிசோட் மட்டும் திகைக்க வைக்கும் ஜொள்ளாபிஷேகம்.

தலைவாசல் விஜய்யின் மனைவியான இவர்,வீட்டில் தங்கிப் படிக்கும் உறவுக்கார பையனிடம் காதல் வயப்படுகிறார். இவர்களின் காதலுக்கு மின்விசிறி துணைபோகும் காட்சிகளில் எல்லாம் தியேட்டரில் வயது பசங்களின் வம்புக் கூச்சல்கள்.

கொஞ்சம் அப்பாவியாக இருந்தாலும்,தலைவாசல் விஜய் ஸ்கூட்டரில் உட்கார்ந்தபடியே வாக்குவாதம் செய்யும் காட்சிகள் பலத்த சிரிப்பு. ஸ்கூட்டரை விரட்டி தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டு இவர் சண்டை போட, பின்னாலேயே ஓடிவந்து விரட்டிப் பிடிக்கும் அந்த ரவுடி எபிசோட் கலகலப்பு. இன்னொரு பக்கம் பிக்பாக்கெட் மாறன். போஸ் வெங்கட்டை அலைக்கழிக்கிற காட்சிகளில் மொத்த தியேட்டருக்கும் வயிற்று வலியே வரும்.

வக்கீலாக நடித்திருக்கிறார் பத்மா அட, தமிழ்நாட்டையே கலக்கிய அந்த பத்மாதான். இவர்தான் கொலையாளி என்று பொலிஸ் நெருங்க, பிறகு இவரும் இல்லை என்கிறபோது கொலையாளி யார் என்ற ஆர்வம் நம்மையும் பிடித்தாட்டுகிறது.


கடைசியில்கொலைநடந்தவிதத்தையும்,யார்கொலையாளி என்பதையும் சொல்லி முடிக்கிற கடைசி ரிலீஸாவது அவனை பொலிஸ் கைது செய்வதுபோல் அமைந்திருக்கலாம். இயற்கை கொடுத்த தண்டனை என்றாலும், அதில் சுவாரஸ்யம் மிஸ்சிங்!

கணேசனின் ஒளிப்பதிவு, கதைக்கு தேவையான அரை யிருட்டை கொடுத்தது யதார்த்தம்.

இசை விஷேசமில்லை. பாடல் வரிகளிலும் வயாக்கராவை தடவியிருக்கிறார்கள்.



# கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் சூர்யா



இரண்டுவருடங்கள்தசாவதாரத்திற்காக எப்படி காத்திருந்தார் கே.எஸ். ரவிக்குமார்? நான்கு மாதத்திற்கு ஒரு படம் இயக்கும் கே.எஸ் ரவிக்குமார் மீண்டும் தனது ரிதத்திற்கு திரும்பியிருக்கிறார்.சொந்தமான கதை செய்கிறேன் என மண்டையை உடைத்துக் கொள்ளும் பழக்கம் இவருக்கு இல்லை. அதனால் தசாவதாரம் ஷூட்டிங்கில் இருக்கும் போதே அடுத்து சரத்குமாரை வைத்து இயக்கும் ஜக்குபாய் கதை விவாதத்தை தொடங்கினார். கே.எஸ் ஆர். சரத்குமார் பொலிஸ் அதிகாரியாக நடிக்கும் இதன் படப்பிடிப்பு தற்போது நடந்து வருகிறது.

இதனையடுத்து சூர்யா நடிக்கும் படத்தை இவர் இயக்க விருப்பதாக உறுதி செய்யப்படாத தகவல் ஒன்று தெரிவிக்கிறது. இந்தப் படத்தில் சூர்யா ஜோடியாக நயன்தாரா நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கே. எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் சூர்யா நடிக்கும் முதல் படம் இது. கஜினியில் நயன்தாரா சிறிய வேடத்தில் நடித்திருந்தாலும் இந்தப் படத்தில் சூர்யா ஜோடியாக முதன் முறையாக நடிக்கிறார்.

இதே வேளை கே. எஸ். ரவிக்குமார் விக்ரம் இரண்டு வேடங்களில்நடிக்கும் படம்ஒன்றையும் இயக்குகிறார்.

# விஜய்யின் புதிய படங்கள்



பெரிய இயக்குனர்களின் படங்களில் நடிக்காமலேயே மிகப் பெரிய இடத்துக்கு உயர்ந்தவர் விஜய்.

அறிமுக இயக்குனர் களின் படத்தில் நடிக்க விஜய் தயங்கியதில்லை.


"அழகிய தமிழ்மகன்" "குருவி" என இரு சுமார் படங்களுக்குப் பிறகு "வில்லு" படத்தில் நடித்து வருகிறவர் அடுத்து அறிமுக இயக்குனர் ஒரு வரின் படத்தில் நடிப்பது ஆச்சரியம்! வில்லு படத்தை பிரபு தேவா புயல் வேகத்தில் எடுத்து வருகிறார். நயன்தாரா ஜோடி கடைசி கட்ட படப்பிடிப்பில் இருக்கிறது படம்.


இது முடிந்ததும் ஏவிஎம் (ஏவிஎம் சரவணனின் சகோதரர் தயாரிப்பு) தயாரிக்கும் படத்தில் நடிக்கிறார் விஜய். இப் படத்தை அறிமுக இயக்குனர் ஒருவர் இயக்குகிறார்.

விஜய்யின் ஐம்பதாவது படத்தையும் வேறு இயக்குனர் தான் இயக்குகிறார்.

தயாரிப்பு மட்டும் விஜய்யின் அப்பாவின் எஸ்.ஏ.சி.யின் வி.வி.கிரியேஷன்ஸ். இதுபற்றிய அறிவிப்பை பிரமாண்டமாக வெளியிட உள்ளார் எஸ்.ஏ.சந்திரசேகர்.

# நம்பர் வன் இடம் பிடிக்க நயன்–திரிஷா போட்டி!





தமிழ் திரையுலகில் நம்பர் வன் இடம்பிடிக்க நயன்தாரா, திரிஷா இடையே கடும் போட்டி நிலவுகிறது. தற்போது நிலவரப்படி நயன்தாரா முன்னிலையில் இருக்கிறார்.

ரஜினி ஜோடியாக நடிக்க அங்கீகாரம் அவருக்கு இருக்கிறது. இளம் ஹீரோக்கள் ஜோடியாகவும் நடித்து வருகிறார். பில்லா படத்தில் தாராள கவர்ச்சி காட்டி எந்த கேரக் டருக்கும் தயார் என நிரூபித்தார்.

சத்யம் படத்தில் இன்னும் ஒருபடி மேலாகக் கவர்ச்சியில் கலக்கியுள்ளார். விஷா லுடன் நெருக்கமாக இவர் நடித்திருக்கும் ஸ்டில்கள் கோடம்பாக்கத்தை திகைக்க வைத் துள்ளன.நயன்தாராவின் சம்பளம் ரூபா 1கோடியாக இருந்தது.

தற்போது ரூபா 1 கோடியே 20 இலட்சம் என எகிறியுள்ளது. அதிக சம்பளம் வாங்கும் தமிழ் நடிகையாக உயர்ந்துள்ளார்.விஜய்யுடன் திரிஷா தான் தொடர்ந்து ஜோடி போட்டு வந்தார். வில்லு படத்தில் அந்த வாய்ப்பு பறிபோய்விட்டது. நயன்தாரா கைக்கு அப்படம் வந்துவிட்டது. இருவருக்கும் இடையே பனிப்போர் நீடிக்கிறது. இருவருமே தெலுங்கிலும் கொடி கட்டிப் பறக்கிறார்கள். ஆனாலும் சம்பளத்தில் நயன்தாராவே முதல் இடம் வகிக்கிறார்.

இந்த மோதல் குறித்து நயன்தாராவிடம் கேட்ட போது அவர் கூறியதாவது,

திரிஷாவை இன்னொரு கதாநாயகியாகத்தான் பார்க்கிறேன். ஸ்ரேயா அசின் மாதிரி அவரும் நானும் திரிஷாவும் தோழிகள் இல்லை. எங்களுக்குள்நட்பு இருக்கிறது என்று எவரேனும் சொன்னால் அதில் உண்மை இல்லை. நான் அவரை விரும்பவும் இல்லை. வெறுக்கவும் இல்லை.என்னுடையவேலையை நான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்.

இவ்வாறு நயன்தாரா கூறினார். நயன்தாரா பற்றி திரிஷா கூறிஇருப்பதாவது,

நயன்தாரா எனக்கு நெருக்கமான தோழி இல்லை .நான் அவருக்கு எதிராக செயற் படவில்லை. ஆனால் அவருக்கு என்னை மாதிரி குணம் இல்லை என்றார்.

# நோத்முதல் கோபல்லவா வரை (63)



### கிளர்ச்சியாளர் வெளியேறலும் அவர் தம் விலகற் கடிதமும்

ஆள்பதி றொபின்சன் இங்கிலாந்துக்குப் போன காலத்தில் குடியேற்ற அலுவலகத்திலே ஐரோப்பிய முதலாளிகளின் கிளர்ச்சி வெறும் சுயநலப் போக்கென்றே கருத்துக் கூறினார். அவர் இங்கிலாந்திலே இருந்த காலத்திலே இலங்கையில் பதில் ஆள்பதியாகக் கடமையாற்றிய மேஜர் ஜெனறல் ஹொட்சன் அவர்களும் சட்டசபைக் கூட்டத்தில் "நான் இலங்கை வாழ் சுதேசிகளின் நன்மை கருதி உள்ளன்போடு இங்கே கூறக் கூடியது இச் சட்டசபை இன்றுள்ள நிலைமையில் இலங்கைக்குப் போதுமானது. இதில் மாற்றமோ திருத்தமோ இன்றைய நிலையில் இப்போது தேவலையில்லை என்பதேயாம். இன்னும் இன்று அதிகாரம் பெற்றிருக்கும் ஆங்கிலேயர் சிறுபான்மையினராயும், ஆளப்படும் சுதேசிகள் பெரும்பான்மையினராயும் இருப்பதால் சுதேசிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து அதற்குப் பணிந்து நடப்பதே செய்யக் கூடிய செயலாகும்" என்று இவ்வாறு பதில் ஆள்பதி பேசியவையெல்லாம் இறாணி அப்புக்காத்து றிச்சாட் மோகன் எழுதிக் கொடுத்ததே என்பது எல்லோருக்கும் தெரிந்தும்விட்டது..

### இலங்கையர் சங்கம் செய்த கிளர்ச்சி

ஐரோப்பாவிலே நெப்போலிய மகாயுத்தங்கள் முடிவுற்று வியன்னா மகாநாட்டுச் சமாதானத்தின் பின் ஐரோப்பியர் ஓரளவுக்கு அமைதியாகவும் சமாதானமாகவும் வாழுவாராயினர். இப்படியான அமைதிக் காலத்திலே தான் மக்கள் தங்கள் உரிமைகள், கடமைகள், தேவைகள், அபிலாஷைகள், சமூகத்தின் தேவைகள், ஆட்சிமுறைகள், அரசமைப்புக்கள் என்பன சம்பந்தமாக ஆராய்வதும் ஆலோசிப்பதும் வழக்கம்.

இந்த வழக்கத்தில் பழகிய ஆங்கிலேயர், அமைதிக் காலத்தில் உத்தியோகங் காரணமாகவும், தோட்டம், தொழில், வர்த்தகம் என்பன காரணமாகவும் பெருந்தொகையினராக இலங்கைக்கு வந்து குடியேறுவாராயினர். அவர்கள் இலங்கையில் ஆட்சிமுறையை அறவே வெறுத்தனர். *ஆள்பதியவர்களின்*

## மீள் பார்வை



**கண்டிப்புகையிரதப் பாதை:** கொழும்பு கண்டிப் புகையிரதப் பாதை அமைப்பின் பொருட்டு கடுகண்ணாவையில் கற்பாறை ஒன்று வெடிக்கச் செய்வதை படத்தில் காணலாம். (Royal Commonwealth Society 1870)

*அதிகாரம், இலங்கைச் சட்டசபையின் அமைப்பு, அதில் அங்கத்தவர் ஆயுட்காலம் வரை நியமனம் பெற்றமை, அதிலே உத்தியோக அங்கத்த வரின் செல்வாக்கு* என்பன அரசியற் சாத்திரத் துக்கும் முறைக்கும் முரணாகவும் பிழையாக வும் இருந்தன. இலங்கை வாழ் மக்களின் பெயரால் நடைபெற்ற சட்ட சபையில் இலங் கையரின் பிரதிநிதிகளாய் மூவர் மாத்திரம் இருந்தமையும், முஸ்லிம்கள், கண்டிச் சிங்களவர் ஆகிய சாகித்தியத்தார் பிரதிநிதித் துவம் வழங்கப் பெறா மல் இருந்தமையும் வருந்தத் தக்க முறைகளாகவே இருந் தன.

நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கோ அன்றி அவர்கள் பிரதிநிதிகளுக்கோ எவ்வித கணகாணிப்பும் இருக்க வில்லை. இலங்கை ஆள்பதி அவர்கள் இலங்கைச் சட்டசபைக்குக் கட்டுப்படாமல் அதன் கருத் தாவா அதிகாரமுடையனவாய் அமை யாதமை அவற்றின் அங்கத்தினரை வெறும் பொம்மைக் கூட்டத்தினராகவே செய்துவிட்டது. சட்டநிரூபணசபை சட்ட நிறை வேற்று சபையின் வால் போலவே அமைந் திருந்தது.

கோல்புறூக் குழுவினர் செய்த திருத்தத்தின் விளைவாக ஆங்கிலம் அரசாங்க மொழியானது. அதனால் உத்தியோகத்துக்காகவும் மேன்மைக்காகவும் இலங்கையர் ஆங்கிலங் கற்று முன்னேறுவாராயினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளிலேயே இலங்கையின் பல பாகங்களிலும், சிறப்பாக யாழ்ப்பாணப் பகுதி யிலே மிஷனரிமார் பல பாடசாலை களைத் ஸ்தாபித்து ஆங்கிலக் கல்வியூட்ட வழி செய்தார்கள்.

**க.சி.குலரத்தினம்**

சென்னைச் சர்வகலா சாலை ஸ்தாபிக்கப்பட்டு 1857 ஆம் ஆண்டி லே அவர்கள் முதன் முதலாக நடத்திய B.A. தேர் வில் திறமையும் முதன்மையாக தேறிய விவேகி கள் யாழ்ப்பாணத்து சி.வை. தாமோதரம் பிள்ளையும், கறல் விசுவநாதப் பிள்ளையு மாவர்.

இங்ஙனமாக ஆங்கிலேயர் வருகையாலும், ஆங்கிலக் கல்வியறிவால் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் பயனாலும் இலங்கையர் தங்கள் அரசாங்கத்தில் உள்ள பெருங்குறைகளை அறிந்துகொள்ளத் தலைப்பட்டனர். (தொடரும்)



அண்மையில் ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை வங்கி அனுசரணையுடன் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாக யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை இரண்டாவது இடத்தை உடுவில் மகளிர் கல்லூரியும், மூன்றாவது இடத்தை வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

# 19 ஆம் நூற்றாண்டு (15)

# ஈழத்துத் தமிழ் இலக்கியம்



மரண சாதன வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற அப்புக்காத்து கூல் எனது சிறைவாசம் என ஒரு நூலை ஆங்கிலத்தில் எழுதினார் என்றும் அறிய முடிகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே தோன்றிய மரபு வழி இலக்கியங்கள் பலவற்றிலும் "கோடு" பற்றிய பல சுவையான செய்திகள் இடம்பெற்றுள்ளன. சிறப்பாக உத்தியோகர் லஷணக் கும்மியிலே இவற்றைப் பரக்கக் காணலாம். சமுதாயப் பின்னணியிலேயே நாம் கோட்டுப் புராணத்தை நோக்குதல் வேண்டும் என்று பேராசிரியர் கைலாசபதி குறிப்பிடுவதும் ஈண்டு மனங் கொள்ளத்தக்கது.

19ஆம் நூற்றாண்டிலே தோன்றிய இத்தகைய இலக்கியங்கள் அக்கால சமுதாய பொருளாதார அரசியல் நிலைமைகளினால் தமது பொருட் பரப்பை விரித்துக் கொண்டன எனலாம்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து இத்தகைய சமுதாய இலக்கிய நோக்கு தலைதூக்கியது. சம காலச் சம்பவங்களைக் கவிப்பொருளாகக் கொண்டு அவற்றினூடாகச் சமுதாய நிலைகள் பற்றிக் கருத்துரைக்கும் போக்கு புதிய செல்நெறியொன்றின் பிரதிபலிப்பு என்றே கொள்ள வேண்டும் என்பர் பேராசிரியர் கைலாசபதி.

19ஆம்நூற்றாண்டின் பிற்பகுதியிலே நவீன இலக்கிய வடிவமான நாவல் இலக்கியம் தோற்றம் பெறுகின்றது. ஏலவே நாம் குறிப்பிட்ட கல்வி, சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக புதுவதான இவ் விலக்கியவடிவம் தோற்றம் பெறுகின்றது.

தமிழ் நாட்டில் 1876 ஆம் ஆண்டு முதலாவது தமிழ் நாவலான *பிரதாப முதலியார் சரித்திரம்* வெளிவந்தது.

இலங்கையில் எழுதப்பட்ட முதல் தமிழ் நாவல் என்ற பெருமை முஸ்லிம் அறிஞரான சித்திலெவ்வை எழுதிய *அசன்பே சரித்திரம்* (1885) என்னும் நாவலுக்கே உரியது. ஆரம்பகால நாவல்களுக்கேயுரித்தான தன்மைகள் பலவற்றைக் கொண்டிருக்கும் இந் நாவலுக்கு ஈழத்துத் தமிழ்நாவல் வரலாற்றிலே அழியாததோர் இடமுண்டு. ஈழத்திலெழுந்த ஆரம்பக் காலத் தமிழ் நாவல்களாக அசன்பே சரித்திரம், திருகோணமலை எஸ். இன்னாசித்தம்பி எழுதிய ஊசோன் பாலந்தைக்கதை(1891), திருகோணமலை த.சரவணமுத்துப்பிள்ளை எழுதிய *மோகனாங்கி* (1895) முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

சமூக சிந்தனையுடன் மரபிலக்கியம் படைத்த த. சரவணமுத்தப்பிள்ளை நாவல் இலக்கியத்திலும் தமது கவனத்தைச் செலுத்தியமை அக்கால இலக்கியப் போக்கையும் நோக்கையும் இவர் உணர்ந்திருந்தமையினாலேயே எனலாம். நாவல் இலக்கியம் பற்றிய இன்றைய நோக்கில் இவற்றைக் நோக்க முயல்வது பொருத்தமாகாது. மேலைப் புல இலக்கியப் பரிச்சயமும் சமூகச் செல்நெறியில் எற்பட்ட மாற்றங்களும் புதுவதான இலக்கிய வகையொன்றினுள் இவர்கள் பிரவேசிக்க வழிவகுத்திருக்கலாம்.

அன்றைய சூழலில் இவர்களது ஆக்கங்கள் புதுமையாக அமைந்தன என்பதை மறுக்கவியலாது.

சமூகத்தை நோக்கி எழுந்த புதுவகையான இலக்கிய வடிவமான நாவல் முதன் முதலிலேயே யாழ்ப்பாணத்திற்கு வெளியே உள்ள அறிஞர்களாலே தோற்றுவிக்கப்பட்டமையும் மனங்கொள்ளத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் தசாப்தங்களிலேயே யாழ்ப்பாணத்தில் நாவல் என்ற இலக்கிய வடிவம் தோற்றம் பெறுவதை யும் அவதானிக்க வேண்டும். ஆரம்பகாலத் தமிழ் நாவல்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே தோன்றுவதும் அவற்றை இஸ்லாமியரான சித்திலெப்பையும் கிறிஸ்தவரான இன்னாசித்தம்பியும் எழுதுவதும் கூர்ந்து அவதானிக்கத் தக்கது.

பல துறைகளுக்கும் முன்னோடிகளை உருவாக்கியது என்று கூறப்படும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே முதன் முதலில் நாவல் இலக்கிய வடிவம் தோற்றம் பெறாமைக்குரிய சமய சமூகப் பண்பாட்டுக் காரணிகள் தனித்து ஆராயப்பட வேண்டியவை .

19ஆம் நூற்றாண்டிலே தமிழ் அறிஞராயும் பத்திரிகையாளராயும் விளங்கிய ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளையின் நன்னெறிக் கதாசங்கிரகம் சிறு கதையின் தன்மையைக் கொண்டது என்று கூறப்படுகின்றது. சிறுகதைக்குரிய தன்மையைக் கொண்ட சில கதைகள் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றியிருப்பினும் அவற்றைச் சிறு கதைகள் என்று கூறுவது கடினமானதே.

(தொடரும்)

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

## வெளிநாட்டுத் தொழிலாளர்களை குறைக்க குவைத் அரசு பரிசீலனை

குவைத் நாட்டில் சமீபத்தில் வெளிநாட்டு தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டதால் அவர்கள் எண்ணிக்கையை குறைக்கலாமா என்று அந்த நாட்டு அரசு பரிசீலித்து வருகிறது.

குவைத் நாட்டில் வெளிநாட்டு தொழிலாளர்கள் சமீபத்தில் வன்முறை போராட்டத்தில் ஈடு பட்டனர். இதனால் கோபம் கொண்ட அந்த நாட்டு அரசு வெளிநாட்டு தொழிலாளர்கள் எண்ணிக்கையை குறைக்கலாமா என்பது பற்றி பரிசீலனை செய்து வருகிறது. வெளிநாட்டு தொழிலாளர்களில் வங்காளதேசத்தினரின் எண் ணிக்கையை குறைக்கவும் நடவடிக்கை எடுக் கப்பட்டு உள்ளது.

சுத்திகரிப்புத் தொழிலில்ஈடுபட்டுஉள்ள வங்காளதேசத்தை சேர்ந்த 850தொழிலாளர்கள் அவர்களின் தாய் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். இதே போல வன்முறையில் ஈடுபட்டு உள்ள இன்னொரு நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களும் திருப்பி அனுப்பப் பட இருக்கிறார்கள்.

வங்காள தேசத்தை சேர்ந்த தொழிலாளர்களை வேலைக்கு எடுப்பதற்கு முன்பு தடை விதிக்கப்பட்டு இருந்தது. அந்த நாட்டு தலைவர்கள் வற்புறுத்தலின் பேரில் தான் இந்த தடை நிக்கப்பட்டது.

அதோடு குறைந்த பட்சம் ஊதியத்தை நிர்ணயிக்கவும் திட்டமிட்டு உள்ளது. இதற்காக ஒன்லைன் மூலம் தேர்தல் நடத்தப்பட்டது. சுத்திகரிப்பு வேலைக்கு குறைந்த பட்ச ஊதியமாக மாதம் ரூபா 6 ஆயிரம் (40 தினார்கள்) நிர்ணயிக்கலாம் என்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஒன்லைன் தேர்தலில்பெரும்பாலானவர்கள் அதிருப்தி- தெரிவித்தனர்.

விசிட் விசா என்ற புதிய விசா முறையை அறிமுகப்படுத்துவது பற்றியும் குவைத் பரிசீலித்து வருகிறது. அரபுநாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்களுக்காக பிசினஸ் விசாவை அறிமுகப் படுத்தவும் அந்த நாடு பரிசீலித்து வருகிறது. (ஓ)

## கண்டன தீர்மானத்துக்கு பயந்து பதவி விலக மாட்டேன்-முஷாரப்

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தனக்கு எதிராக கொண்டுவரப்படும் கண்டனத் தீர்மானத்திற்கு பயந்து பதவி விலக மாட்டேன். கண்டனத் தீர்மானத்தைச் சந்திக்க தயாராக இருக்கிறேன் என்று அறிவித்தார்.

**சர்தாரி -நவாஸ் ஷெரீப் தீர்மானம்**

பாகிஸ்தானில் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப்பை கவிழ்த்துவிட்டு முஷாரப் 8 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சியைப் பிடித்தார். 1999ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் திகதி முதல் அவர் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வருகிறார்.

சமீபத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆசிப் சர்தாரி தலைமையிலான மக்கள் கட்சியும், நவாஸ் ஷெரீப் கட்சியும் வெற்றி பெற்று கூட்டணி அமைத்துள்ளனர். முஷாரப் ஆதரவு முஸ்லிம் லீக் கட்சி தோல்வி அடைந்தது. இது முஷாரப்புக்கு பெரும் சரிவாகும். அவர் ஜனாதிபதி பதவியில் இருப்பதில் திருப்தியடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந் நிலையில் முஷாரப் ஆட்சிக்காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆஸிப் சர்தாரியில் நவாஸ் ஷெரீப் சேர்ந்து முஷாரப்பின் பதவியை பறிப்பதற்காக அவர் மீது கண்டனத்தீர்மானம் கொண்டுவர திட்டமிட்டுள்ளனர்.

**சந்திக்கத்தயார்** – ஆளும் கூட்டணி தலைவர்கள் தன்மீது கண்டனத்தீர்மானம் கொண்டுவர முடிவு செய்ததும் முஷாரப் தன் சட்ட ஆலோசகர்களை சந்தித்து ஆலோசனை நடத்தினர். அப்போது தன் ஆதரவு முஸ்லிம் லீக் (கியூ) தலைவர் முகமது அலிப்துரானி, அரசியல் சட்ட ஆலோசகர் ஷரிபுதீன் பிட்சாடா அரசாங்க வக்கீல் மாலிக் கய்யூம் ஆகியோரிடம் கூறுகையில்,

சுயலாபத்திற்காக நான் அரசியல் சட்டத்தை மீறவில்லை என்று குறிப்பிட்டார். என் செயற்பாடுகள் அனைத்தும் பாகிஸ்தானில் நன்மையை மையமாகக்கொண்டு இருந்தன என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் என் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கு பாராளுமன்றத்தில் பதிலளிப்பேன் என்றும் கண்டனத் தீர்மானத்தை நான் சந்திக்க தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்தார்.

தன் மீது கண்டனத்தீர்மானம் கொண்டு வரப்பட்டால் நான் பதவி விலகிவிடுவேன் என்று முன்பு ஒரு முறை முஷாரப் அறிவித்து இருந்தார். இதனால் அவர் பதவி விலகிவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் பதவி விலகமாட்டேன் என்று அறிவித்து இருக்கிறார். இதை அவரது உதவியாளர்கள் பாகிஸ்தான் பத்திரிகைக்கு தெரிவித்தனர்.

இதற்கிடையில் ஆஸிப் சர்தாரி தன் உதவியாளர் மூலம் முஷாரப்புக்கு செய்தி அனுப்பினார். அதில் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் அப்படி அவர் செய்தால் அவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் நடவடிக்கைகள் கைவிடப்படும் என்று அவர் அறிவித்தார்.

ஆனால் அதற்கு முஷாரப் மறுத்துவிட்டார். என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு பதிலாளிக்காமல் அவற்றை எதிர்த்து என் கருத்தை தெரிவிக்காமல் நான் சரண் அடைய மாட்டேன் என்று முஷாரப் தெரிவித்து விட்டார். அவர் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்திய போது பாராளுமன்றத்தை கலைப்பதற்கு உள்ள அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்துவதன் சாதக பாதகங்களை பற்றி அலசி ஆராய்ந்தனர்.

நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தலாமா என்று அவர்கள் ஆலோசித்தனர்.



**தலையிடமாட்டோம்- அமெரிக்கா**

இந்த நிலையில் இந்த விவகாரத்தில் தலையிடமாட்டோம் என்று அமெரிக்கா அறிவித்துவிட்டது. இது பற்றி வெளிநாட்டு இலாகா செய்தி தொடர்பாளர் கூறுகையில், இது உள்நாட்டு விவகாரம் இதில் நாங்கள் தலையிட மாட்டோம் . இது பற்றி அந்த நாட்டு மக்கள் தான் முடிபு செய்யவேண்டும் எங்கள் எதிர்பார்ப்பு என்ன என்றால் ஆட்சியாளர்கள் எடுக்கும் நடவடிக்கை சட்டப்படியானதாகவும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டும் இருக்க வேண்டும் என்பது தான் என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நாங்கள் நிலைமையை கூர்ந்து கவனித்து வருகி றோம் ஜனநாயக முறையில் தேர்ந் தெடுக் கப் பட்ட அர சாங்கத்துடன் நாங்கள் தொடர்ந்து நெருங்கிய உறவு வைத்துக்கொண்டு இருப்போம் என்றும் அவர் கூறினார். (ஓ)

## நேபாளத்தில் திபெத்திய ஆர்ப்பாட்டக்காரர் 740 பேர் அந்நாட்டு பொலிஸாரால் கைது

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவிலுள்ள சீனத் தூதரகமொன்றினுள் பிர வேசிக்க முயன்ற நூற்றுக்கணக்கான திபெத்திய ஆர்ப்பாட்டக்காரர்களை அந் நாட்டு பொலிஸார் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீனாவின் பீஜிங் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்பு மதகுருமார் உட்பட பெருமளவு திபெத்திய அகதிகள் மேற்படி சீனத் தூதரகத்தைமுற்றுகையிட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதன் போது குறைந்தது 740ஆர்ப் பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. அதே சமயம் வியாழக்கிழமை ஒலிம்பிக் போட்டிக்கு எதிர்ப்புத்தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 513 பேர் கைது செய்யப்பட்டனர். (ஓ)

## உலக தரிசனம்

## டெக்ஸாஸில் இந்த வாரத்தில் இண்டாவது மரண தண்டனை நிறைவேற்றம்

அமெரிக்க டெக்ஸாஸ் மாநிலத்தில் ஹொண் டூரஸ் நாட்டுப் பிரஜை ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஹெலிபேர்டோசி (29வயது) என்ற இந்த நபருக்கு டெக்ஸாஸிலுள்ள சிறைச்சாலையொன்றில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகவும் இதன்போது அவரால் படுகொலை செய்யப்பட்டவரின் இரு மகன்களுக்கு அதனைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

2001ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்த ஹெலி பேர் டோசி தான் தையல்காரராக பணியாற்றிய டெக்ஸாஸிலுள்ள ஆடை நிறுவன மொன்றின் உரிமையாளரான அர்மன்ட் பலியோட் டாவை துப்பாக்கியால் சுட்டுப்படுகொலை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாரத்தில் டெக்ஸாஸில் மரண தண்டனை நிறைவேற்றத்திற்கு உள்ளாகிய இரண்டாவது வெளிநாட்டுப் பிரஜையாக ஹெலி பேர்டோசி விளங்குகிறார்.

1993ஆம் ஆண்டு சிறுமியொருவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் மெக்ஸிக்கோ பிரஜையான ஜோஸ் மெடேலின் என்பவருக்கு கடந்த புதன்கிழமை மரணமர தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## உணர்ச்சி வசப்பட்டால் மயங்கி விழும் மாணவி

(லீசெஸ்டர்)

மனம் விட்டு சிரித்தால் உடனே அந்த இடத்திலேயே மயங்கிவிடுகிறாள் இங்கிலாந்து மாணவி. இங்கிலாந்தின் மத்திய பகுதியில் உள்ளலீசென்ஸ்டர் ஷைர் மாகாணத்தைச் சேர்ந்தவர் கே. அண்டர்வுட் வயது20 இவருக்கு வினோதமானஅபூர்வ நோய் இருப் பது ஐந்து ஆண்டுகளுக்குமுன் கண்டு பிடிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்குமுன் ஒரே நாளில் 40முறைஇவர்மயங்கி விழுந்தார். மயக்கத்தில் இருந்தாலும் சுற்றிலும் நடக்கும் அனைத்து ஒலிகளும் அவருக்கு கேட்கிறது.

டாக்டர்களிடம் பரிசோதித்ததில் உணர்ச்சி வசப்படும் போதுஅவரது தசைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்காரணமாகவே அவர் மயங்கி விழுவது கண்டு பிடிக்கப்பட்டது .

இது மிகவும் அபூர் வமான நோய் என்பதால் இதற்கு சிகிச்சை இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை கோபப் பட்டர்லோ, பயப்பட்டாலோ, வெட்கப்பட்டாலோ, தர்மசங்கடமான சூழ் நிலை ஏற்பட்டால் கூட இவர் மயங்கி விழுந்து விடுகிறார் நீண்ட நேரத்துக்கு இ-துபுற அங்கங்கள் செயலிழந்து விடுகின்றன. (ஓ)

## அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய 13 இலட்சம் பேர் வெளியேற்றம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய மக்கள் எண்ணிக்கை வெகு வேகமாக குறைந்து வருகிறது. கடந்த ஓராண்டில் 13 இலட்சம் பேர் வெளியேறிவிட்டனர். அமெரிக்காவில் குடிமக்கள் என்ற உரிமை பெறாமல் சட்ட விரோதமாக நுழைந்து குடியேறுவோர் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. விமான நிலையம் உட்பட முறைப்படி வழிகளில் நுழைவோரை தடுக்க முடிந்தாலும் சட்ட விரோதமாக நுழைவோரை தடுக்க முடியவில்லை.

அமெரிக்காவில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து பல ஆண்டுக்கு முன்னர் மக்கள் குடியேறிவிட்டனர். அவர்களில் சிலர் சட்டப்படி குடியுருமை பெற்றனர். பலரும் சட்டவிரோதமாக குடியேறி உள்ளனர். இந்த வகையில் மெக்சிகோ, கியூபா வழியாக ஹிஸ்பானிக் இனத்தவர் ,அமெரிக்காவில் பல லட்சம் பேர் குடியேறி உள்ளனர். ஹிஸ்பானிக் இனம் என்பது ஸ்பெயினில் இருந்து வந்தவர்கள் என்று கூறப்பட்டாலும் உண்மையில் அவர்கள் ஸ்பெயின் மக்கள் அல்ல.

இளம் தலைமுறையினரான இவர்கள் பலரும் ஸ்பெயின்பேசுவதில்லை . ஆங்கிலம் தான் பேசுகின்றனர். அமெரிக்காவில் கலிபோர்னியா, அரிசோனா உட்பட சில மாநிலங்களில் இவர்கள் சட்டவிரோதமாக வேலை செய்கின்றனர். இவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதான திட்டம் குறித்து சமீபத்தில் பாராளு மன்றில் எம். பிக்கள் பேசுவதாக இருந்தது. ஆனால் இந்த திட்டம்மூலம் பலன் இல்லாததால் ஹிஸ்பானிக்இனத்தவர் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு பக்கம் தங்களுக்கு மறுவாழ்வு கிடைக்காது என்பதுடன் வேலையும் பறிபோகும் நிலையும் அதிகரித்து வருகிறது. சட்டவிரோதமாக ஆட்களை வைத்துவேலை வாங்கும் நிறுவன உரிமையாளர்கள்கைது செய்யப்படுவதும் அதிகரித்து வருகிறது.

குடியேற்றத்துறை இப்படி கிடுக்கிப்போட்டு வருவதுடன் அமெரிக்காவில் பொருளாதார நிலை சரிந்து வருவதால் இனியும் அமெரிக்காவில் இருந்து பயனில்லை என்று தான் ஹிஸ்பானிக் இனத்தவர் வெளியேறி வருகின்றனர். ஐரோப்பிய நாடுகளை நோக்கி அவர்கள் சென்று கொண்டிருக் கின்றனர். கடந்த ஓராண்டில் 13 இலட்சம் பேர் வெளியேறி விட்டனர்.இன்னும்ஓராண்டில் இதற்கு மேல் வெளியேறிவிடுவர் என்று குடி யேற்றத்துறை அதிகாரிகள் நினைக்கின்றனர் .இதனால் சட்ட விரோதமாகக் குடியேறியோர் எண்ணிக்கை பாதியாககுறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ)

## மீண்டும் கட்சியில் சேர மாட்டேன் சோம்நாத் சட்டர்ஜி

(கோலாலம்பூர்)

சபாநாயகர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும்மீண்டும்மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட்கட்சியில் சேரமாட்டேன் எனசோம்நாத்சட்டர்ஜி கூறினார்.

கோலாலம்பூரில் நடக்கும் 54ஆவது பொதுநலவாய பாராளுமன்ற சங்க மாநாட்டில் பங்கேற்பதற்காக சபாநாயகர் சோம் நாத் சட்டர்ஜி கோலாலம்பூரில் நிருபர்களிடம் கூறியதாவது,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்தவரை மிகவும் பெருமிதத்துடன் இருந்தேன். ஆனால் என்னை கட்சியிலிருந்து விலக்குவதாக அறிவித்த போது அந்த நாள் தான் என் வாழ்நாளில் சோகமான நாளாக அமைந்தது.

கட்சியில் மீண் டும் இணைவதற்கு நான் எவ்வித முயற் சியும் செய்ய வில்லை நான் சபாநாயகர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் அரசியல் வாழ்க்கையிலிருந்து விடுபட்டு ஒதுக்குப் புறமான கிராமத்திற்குப் போக நினைக்கிறேன். கட்சியிலிருந்து அழைப்பு வந்தாலும் நான் அதை ஏற்கமாட்டேன் . நாட்டு மக்களின் பிரதி நிதித்துவம் உள்ள மிக முக்கியமான அமைப்பான பாராளுமன்றம் ஒழுங்காக செயற் பட வேண்டும் என நான் எடுத்த முடிவுக்கு நாட்டின் பலதரப்பு மக்களிடம் இருந்து அமோக வரவேற்று வந்தது என்றார் சோம்நாத் சட்டர்ஜி. (அ)



# உயிர் அச்சுறுத்தல் பற்றி முறையிட்டும்
# எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

## அனுதாபப் பிரேரணையில் மங்கள சமரவீர எம்.பி.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகஇருந்த போதும் ஜனாதிபதி தேர்தலின் போதும் கடுமையாக உழைத்த ஸ்ரீபதி சூரியாராச்சிக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் முறையிட்ட போதும் ஜனாதிபதிஎவ்விதமான நடவடிக்கைகளையும்மேற்கொள்ளவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர்மங்கள சமர வீர தெரிவித்தார். முன்னாள் அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சியின்அனுதாப பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, அரசியலில்ஆக்கபூர்வமான அரசியல் வாதியையும் இந்தயுகத்திற்கு அத்தியாவசியமான ஒரு வரையும் நாடு இழந்து விட்டது. அரசியல் ஊடகம் தொடர்பில் தெளி வான சிந்தனையை அவர் கொண்டிருந்தார்.

ஸ்ரீபதிதொடர்பில் பல்வேறு தகவல்கள் பலருக்கும் தெரியாது தனியாக நின்று வேலைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். பொதுத் தேர்தலில் கடுமையாக உழைத்தவர் மட்டுமல்லாது அரச நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்து பல வேலைத் திட்டங்களை திறம்பட முன்னெடுத்தவர்.

கொழும்பிலுள்ள குடிசை வீடுகளுக்காக மாடிவீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அன்று அமைச்சராக இல்லாமலேநிர்வாகத்தின் மூலம் அதனை முன்னெடுத்து சென்றார் இன்று மாடிவீட்டுத் திட்டம் அப்படியே கைவிடப் பட்டது.

தேர்தலில் தோல்வியடைந்தபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையை மக்கள் முன்கொண்டு செல்வதற்காக சொந்தப் பணத்தில் பத்திரிகையை ஆரம்பித்தவர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன்திரைக்கு பின் நின்று கடுமையாகஉழைத்தவர். ஜே.வி.பியுடனான கருத்து மோதல்களைமுடிவுக்கு கொண்டுவந்து கூட்டமைப்பின் யாப்பை நிறுவுவதற்கு உழைத்தவர்.

ஸ்ரீபதியின் உழைப்பில் உருவாக்கப்பட்ட வியர்வை சிந்தப்பட்ட அரசாங்கமே இன்று ஆட்சிசெய்கின்றது. அதன் மூலமாக தெரிவு செய்யப்பட்ட நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாபதியே இன்று ஆட் சியமைக்கின்றார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக பலர்வேலை செய்த போதும் ஸ்ரீபதியே தனிமையில் நின்று உழைத்தவர். ஹெலபிங் அம்பாந்தோட்டை குற்றச்சாட்டின் பேரில் குரல் கொடுத்தார்.

அமைச்சரவையில் 75அமைச்சர்கள் இருந்த போதிலும் அதனை குறைக்குமாறு கோரியபோது அதற்காக கொள்கையுடன் செயற்பட் டார். விருப்பத்துடன் அமைச்சுப்பதவியை இராஜினாமா செய்தார். அமைச்சராக இருந்தபோது அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அது தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிட்ட போதும் எவ்விதமான நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை:(ஓ)


**V.V.RAMANATHAN & COMPANY (PRIVATE) LIMITED**
**(Civil Engineering Contractors)**

**வேலை வாய்ப்பு**

பருத்தித்துறை பொதுச்சந்தைக்கான புதிய கட்டிட நிர்மாணப் பணி ஸ்தலத்திற்கு கீழ் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள் ளன. பொருத்தமானவர்கள் போதிய ஆதார ஆவணங்களுடன் கீழ் குறிப்பிடும் நிர்மாணப்பணி அலுவலகத்திற்கு 12.08.2008 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நேரில் சமூகம் அளிக்கவும்.

01. நிர்மாணப்பணி முகாமையாளர் (Site Manager)
குறைந்தது ஐந்து வருட அனுபவத்துடன் BSC பட்டதாரியும் அல்லது சமமான தகுதி உடையவர்கள்

02. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (கட்டிடம்) (Technical Officers-Building)
குறைந்தது 3 வருட புல அனுபவத்துடன்NDT பட்டதாரியும் அல்லது குறைந்தது 5 வருட புல அனுபவத்துடன் NCT சித்தி பெற்றவர்களும்

03. மொத்த அளவையாளர்கள் (Quantity Surveyors)
குறைந்தது 5 வருட புல அனுபவத்துடன் NCT QS சித்திபெற்ற வர்கள்

04. காவலாளர்கள் (Security Guard)
குறைந்தது 10 வருட அனுபவத்துடன் க.பொ.த (சா.த) சித்திபெற்ற வர்கள்.

05.களஞ்சிய பொறுப்பாளர்கள் (Store Keeper)
குறைந்தது 10 வருட அனுபவத்துடன் க.பொ.த. (சா.த) சித்திபெற்றவர்கள்.

தொடர்புகளுக்கு

முகாமையாளர்,
பொதுச்சந்தைக்கானபுதிய கட்டிட நிர்மாணப்பகுதி,
பேரூந்து நிலையம்,
பருத்தித்துறை.

(1522)


# யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் நடாத்திய மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் கிளை சங்கம் யாழ் .மாவட்ட பாடசாலை சாரணர்களுக்கிடையில்கடந்த 26, 27 ஆம்திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் மெய்வல்லு நர் போட்டிகளை நடாத்தியது. இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற வர்களின் விபரம் வருமாறு, 7-9 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி வருமாறு,

**75m ஓட்டம்:**-கு.சாருஜன்-ஜோன் பொஸ்கோ வித்தி,பி.டு ஷாந்-சொன் பற்றிக்ஸ் கல்லூரி, பி.பென் பீற்றர்சன்- சென் பற்றிக்ஸ் கல்லூரி.

**நின்று நீளம் பாய்தல்:**- த.டிலக்ஷன்-ஜோன் பொஸ்கோ வித்தி., பி.பிரவீணன் -ஜோன் பொஸ்கோ வித்தி., ம.றொக்சன் -நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்.

**பந்தெறிதல்:**- கு.சாருஜன் - ஜோன் பொஸ்கோ வித்தி., அ.அன் ரனிடன்சன் -நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்,பா. நிவேதிகன் -சென் பற்றிக்ஸ் கல்லூரி.

**சமநிலை ஓட்டம் :**- வி.பிரவீனன் ஜோன் பொஸ்கோ வித்தி, அ.கிசான்-நாவாந்துறை றோ.க. வித்தி, சி.லிங் கேசன்-ஜோன் பொஸ்கோ வித்தி.

**தடை ஓட்டம்:**-கு.சாருஜன் ஜோன். பொஸ்கோ வித்தி, அ.அன் ரனிடன் சன் -நாவாந்துறைறோ.க.வித்தி,சு.பெனற் பீற்றர்சன் -சென்பற் றிக்ஸ் கல்லூரி.

**10-11 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி 100m ஓட்டம்**

ச.கோமேதகன்-யாழ். மத்திய கல்லூரி, செ.ஏனோக்றாஜ் -ஜோன் பொஸ்கோ வித்தி, யே.தேவறாஜ் - யாழ். மத்திய கல்லூரி.

**நின்று நீளம் பாய்தல்:**-பொ. தேவராஜ் -யாழ். மத்தியகல்லூரி, செ.ஏனோக்றாஜ்- ஜோன் பொஸ்கோ வித்தி, அ.மு. ஸ்ரெபான் -சென்பற் றிக்ஸ் கல்லூரி.

**பந்து எறிதல்:**- யோ. தேவ ராஜ்-யாழ்.மத்திய கல்லூரி, ச.கோ மேத கன் - யாழ் மத்திய கல்லூரி, க.செபஸ்ரியன்-நாவாந்துறை றோ. க.வித்தி.

**சமநிலை ஓட்டம்:**- ஜே.ரஜீவன் - நாவாந்துறை றோ.க. வித்தி., கொ. நத் தேனியர்-சென்பற்றிக்ஸ்-கல் லூரி, கி.செபஸ்ரியன் -நாவாந் துறை றோ.க. வித்தி.

**தடை ஓட்டம்:**- ஜே.ஏஜீவன்-நாவாந்துறை றோ.க.வித்தி., அ.ஸ்ரெபான் -சென்பற்றிக்ஸ் கல்லூரி, சென. ஏனோஜ்றாஜ்-ஜோன்பொஸ்கோ வித்தி.

**அஞ்சல் ஓட்டம்:**- யோன் பொஸ் கோவித்தி, யாழ். மத்திய கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி.

**12-15 வயதுப் பிரிவு**
**ஆண்களுக்கான போட்டி**

**100 m ஓட்டம்:**-யோ.தனுசன்-யாழ். ஊர்காவற்றுறை புனித அந் தோனியார் கல்லூரி, செ.அஜித்சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம், கி.விதுரன் -புனித சாள்ஸ் மகா வித்தி.

**குண்டு எறிதல்:**- யோ. தனுசன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, யோ. சிந்தீபன் கொக்குவில் இந்து கல்லூரி, மோ.ஸ்ரீவண்ணன் -யாழ். மத்திய கல்லூரி.

**நீளம் பாய்தல்:**-யோ. தனுசன் - ஊர்காவற்றுறைபுனித அந்தோனியார் கல்லூரி, ஜெ.ஜெ சிந்தன் - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, மோ.ஸ்ரீ வண்ணன் - யாழ். மத் திய கல்லூரி.

**100 m ஓட்டம்:**- ஜெ.ஜெசிந்தன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, த.பிரணவன் யா ழ். மத்திய கல்லூரி, செ.அஜீத் -ய ாழ். புனித சம்பந்தாசியார் கல்லூரி.

**தடை ஓட்டம்:**- ம.கெயின்சன் - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி,ச. அலன்ரினன்-யாழ். மத்திய கல்லூரி, மோ.ஸ்ரீவண்ணன்- யாழ் மத்திய கல்லூரி

**4X100 அஞ்சல் ஓட்டம்:**- புனித அந்தோனியார் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி.

**16-18 வயதுப் பிரிவு**
**ஆண்களுக்கான போட்டி**

**200m ஓட்டம்:**-வே. அருள்ரூபன் -புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், க.விக்கினேஸ்வரன் புனித அந்தோனியார் கல்லூரி, ம.டிலக்சன் -நாவாந்துறை றோ.க.வித்தி.

**800m ஓட்டம் :**-போ .றிபிலி சாந் - சாள்ஸ் மகாவித்தியாலயம், ர. திவாகர் யாழ். மத்தியகல்லூரி, ஜி.பகீர தன் -புனித அந்தோனியார் கல்லூரி,

**குண்டு எறிதல்:**-ர.திவாகர் -யாழ். மத்தியகல்லூரி, ம.சஞ்சீவன் புனித சம்பத்தாசியார் வித்தி, க.விக்கினேஸ்வரன் -புனித அந்தோனி யார் கல்லூரி.


**நீளம் பாய்தல்:**-க. விக்கினேஸ்வரன் -புனித அந்தோனியார் கல்லூரி, ர.திவாகர்-யாழ். மத்திய கல்லூரி,நா.சஞ்சீவன் -கொக்குவில் இந்துக்கல் லூரி.

**தடை ஓட்டம்:**-ஆ.யூட் அனோஜன் -புனித சாள்ஸ் மகாவித்தி, ர.ராஜன் -புனித அந்தோனியார் கல்லூரி, ம.சிவரத்தன் -புனித அந்தோனியார் கல்லூரி.

**அஞ்சல் ஓட்டம் 4X200:**- ஊர்காவற்றுறைபுனித அந்தோனியார்கல்லூரி,யாழ் . மத்திய கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரி.

(ஓ-14)

# நல்லூரான் திருவடிக்கு இன்று ஐந்தாம் திருவிழா



## எமக்கருள் செய்வாய் !

ஈழத்தின் தலைநகராம் நல்லூர் அன்று
உந்தன் சந்நிதானமாம் நல்லூர் இன்று
கந்தபுராணத்தின் உந்தன் புகழைப்பாடி
கச்சியப்பர் மேன்மை பெற்றார் அன்று
அருணகிரி திருப்புகழைப்பாடி
ஆறுமுகனை மகிழ்வித்தார் அன்று
நாம் இன்று உன்னைப்பாடுகின்றோம்
எமக்கருள் செய்வாய் இன்று

*விநாயகன் டினேஸ்கரன்*
*நெடியகாடு, வல்வெட்டித்துறை*

## இப்பவே பிழைபொறுத்து எங்களுக்கு அமைதி தா

அப்பனே முருகா எம்மை ஆதரித்தருள்வாயென்று
எப்பவும் உன் முன் வந்து ஏங்கிடும் ஏழைகட்கு
இப்படியானஅவல வாழ்வை ஏன்தான்அருள்கின்றாயோ
தப்புகள் செய்யா மாந்தர் தரணியில் உண்டோ ஐயா?
அப்பனுக்குபதேசித்து ஆண்டியாய் நின்ற வேலா
இப்பவேபிழைபொறுத்து எங்களுக்கு அமைதியைத்தா

*கவிமணி அன்னைதாஸன்*
*உரும்பிராய்*

## உறுதியாக வாழ அருளைத் தா !

அப்பனின் அருளால் அவதரித்தீரே
அன்னையின் அருளால் ஒன்றானீரே
ஆறுபடை வீடு கொண்டீரே
ஆறுதல்கள் தர அவதரித்தீரே
இன்னல் தீர்க்க இவ் உலகிற்கு வந்தீரே
இறுமாப்புக் கொண்டோரை அழித்தீரே
ஈடில்லா கருணை உடையவரே
ஈன இரக்கம் உடையோரைக் காத்தீரே
உலகை ஆளும் உத்தம வீரா
உறுதியாக வாழ இடையறாத அருள் தருவீரே

*பகீரதன்-கொக்குவில் கிழக்கு*

## துயரினை நீக்கும் வேலா

பொன்னொளி வீசும் ஞானம்
பொங்கெழில் கொண்ட வேலன்
கன்னியர் இருவர் சூழக்
கார்மயில் மீது நாளும்
துன்னிய அடியார் தங்கள்
துயரினை நீக்க வன்றோ
மன்னிய நல்லை வீதிப்
பவனியை விரும்புகின்றான்

*சி.வெற்றிவேலு*
*வட்டுக்கோட்டை*

## வெவ்வினை தீர்ப்பவனே !

வேல் பிடித்து வெவ்வினை தீர்பவனே -உன்
கால் பிடித்து இறைஞ்சி நின்றோம் - எம்
துயர் தன்னைத் தீர்த்திடுவாய் என்றும்
நல்லூர்ப் பதியானே சரணம் ஐயா

*வ.காந்திமதிநாதன்*
*கொற்றாவத்தை*

## நல்லூரானே நல்வாழ்வு அருள்வாய் !

பச்சைமயில் வாகனனே ஆனழகா
அடியார்கள் அவலங்கள் மண்ணிலே மறைய
உனைப் பலகோடி முறை பணிந்தோமே குகனே
வள்ளிதெய்வானையின் மணவாளனே
பாடி உனை நிதம் தொழுகின்றோம் வேலவா
பக்தர்களின் குறை தீர்த்தருளும் சண்முகா
நாடி வரும் அடியார்க்கு நலமளிக்கும் ஆறுமுகா
நல்வாழ்வு நமக்களித்தருள்வாயே நல்லூரானே

*திருமதி செ. பாக்கியநாதன்*
*சங்கானை.*

# மொரட்டுவையில் சீ-4 வெடிபொருள் மீட்பு சந்தேகத்தின் பேரில் தாயும் மகளும் கைது

(கொழும்பு)

மொரட்டுவை சொய்சாபுரம் பகுதிவீடொன்றிலிருந்து அதிசக்தி வாய்ந்த சீ-4வெடி பொருட்கள்பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. வீட்டின் அலுமாரி ஒன்றினுள் இருந்தே இந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. வெடிபொருட்கள் மீட்கப்பட்டதையடுத்து குறித்த வீட்டில் தங்கியிருந்த தாயும் மகளுமாக இருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தொடர்ந்தும் கூறியதாவது,

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மொரட்டுவை சொய்சாபுர பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின்அலுமாரிக்குள் இருந்து 98 கிராம் நிறையுடைய சீ-4வெடி பொருட்கள் மீட்கப்பட்டன. குறித்த அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த துவாயினுள்ளேயே இந்த வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

குறித்த வெடிபொருட்கள்மீட்கப்பட்டதை அடுத்து அவ் வீட்டிலிருந்த தாயும் மகளுமான இரு தமிழ் பெண்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.அவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத் தப்பட்டு வருகின்றனர்.சம்பவம் தொடர்பில் கல்கிஸை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வரு கின்றனர். (ஓ)

# இலங்கையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 10 இந்திய மீனவர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் விளக்கமறியலில். வைக்கப்பட்டிருந்த 10 இந்திய மீனவர்களும் நாடு கடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறி இவர்களில் ஐவர் இலங்கையின் கடற்படையினரால் 2006 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமையன்று கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் விரைவில் மன்னார் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டு இந்தியாவுக்கு நாடு கடத்தப் படவுள்ளனர்.

விடுவிக்கப்படும் மீனவர்கள் நடுக் கடலில் வைத்துக் கடற்படையினரால் இந்தியக் கடற்படையினரிடம் கையளிக்கப்படுவதே வழமையாக இருந்து வந்தது.

எனினும் குற்றம் சுமத்தப்பட்ட நிலையிலேயே இந்த 10 பேரும் சட்டப்படி நாடு கடத் தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி

**இக்காண்காட்சி 12ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை திருநெல்வேலி, மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திலும் அதனைச் சூழவுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.**

கல்வி என்பது மாணவர்கள் வகுப்பறை யிலும் பாடசாலையிலும் பெறும் அனுபவங்களை மட்டும் கொண்டதல்ல.பாடசாலைக்கு வெளியேயும் அவர்களின்அனுபவங்களைப் பெற்றுதமது எதிர்காலவியல் வாழ்வை வளப்படுத்திக் கொள்வதாகவும் அமைதல் வேண்டும். பல்வேறுபாடம் சார்பான எண்ணக் கருக்களையும் எதிர்கால வாழ்வியலுடன் தொடர்புடைய அனுபவங்களையும்இக் கண்காட்சி தன்னகத்தே கொண்டிருப்பதால் சகலமாணவரும் இக்கண்காட்சியை பார்வையிடுவதன் மூலம் தமது ஆற்றல்களை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

உயிரியல், விஞ்ஞானம், விவசாயம், இரசாயனவியல்,மனைப்பொருளியல் போன்ற பாடங்களைக் கற்போருக்கு வேண்டிய செயல்முறை அனுபவங்களை இக் கண்காட்சி யினூடு பெற்று பயனடைய முடியும். ஒட்டுதல், பதிவைத்தல், விதைத் தொழில்நுட்பம், மண்வகைகளும் மண்பரிசோதனையும் ஒருங்கிணைந்த பீடைப் பரிபாலனம் ஒன்றிணைந்த பயிர்ப் போசணைத் தொழில்நுட்பம், பயிர்ச்செய்கையில் கால நிலையை ஆளுகை செய்யும் தொழில்நுட்பம் போன்றனவும் உணவுப் பொருட்களை நற்காப்புச் செய்யும் உத்திகள், உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு தரமான உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் உத்திகள், உணவுப் பொருட்களின் பெறுமானம் அதிகரிக்கும் செயற்பாடுகள் போன்றவற்றை செயல் ரீதியில் விளக்குவதற்கு இலங்கை தொழில் நுட்ப சேவையினைச் சேர்ந்த நன்கு பயிற்சி பெற்ற தொழில்நுட்பவல்லுநர்கள் காத்திருக்கிறார்கள்.

இதனைவிட புவியியல், சுற்றாடற் கல்வி போன்றபாடங்களுக்குரிய பல்வேறு எண்ணக் கருக்களும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. யாழ். குடாநாட்டின் மண்வகைகள் பயிர்ச் செய்கையைத் தீர்மானிக்கும் காலநிலை பற்றிய போக்குகளும் ,எதிர்வுகூறல்களும் மண் காப்பு உத்திகள் நிலைபேறான சூழல் முகாமைத்துவம், நீர்முகாமைத்துவம், கழிவு முகாமைத்துவம் போன்றனவும் அங்கு செயல் வடிவம் பெற்றுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளை எமது மாணவர் சமூகம் பார்ப்பதனோடு எதிர்காலவியல் சவால்களிற்கு முகம் கொடுக்கக் கூடிய ஆற்றல்களைப் பெறுவார் என்பதில் ஐயமில்லை. இதனை விட மேற்கூறிய பாடங்களுடன் தொடர்பான வினாக்கள் பரீட்சைக்கு வரும்போது அவற்றிற்கான விடைகளை எழுதும் ஆற்றலுக்குரிய எண்ணக் கருக்களை இங்கு பெறக்கூடியதாகவும் உள்ளது. (ஓ)

## கொழும்பு பாலத்துறை பகுதியில் மூவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு பாலத்துறை பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு மூவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். இச்சம்பவம் வெள்ளி இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

பாலத்துறை பாலத்திற்கு கீழாக செல்லும் வீதியில் மேற்படி மூவரும் காரில் பயணித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இனந் தெரியாத நபர்களினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் காரில் இருந்த மூவரும் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஓ)

## ஒன்றுகூடல் நிகழ்வு

முதுகலைமாணி அணிஇரண்டு 2008 பிரதேச திட்டமிடல் மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்தில் நடைபெற உள்ளது .

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன்,சிறப்பு விருந்தினராக பட்டப் படிப்புகள் பீட,பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி ,கௌரவ விருந்தினர்களாக பிரதேச திட்டமிடல் கற்கை இணைப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை , குடித்தொகை அபிவிருத்தி கற்கை இணைப்பாளர் பேராசிரியர் க.குகபாலன், தமிழ் கற்கை இணைப்பாளர்பேராசிரியர்எஸ்.சிவலிங்கராசா, அபிவிருத்தி கற்கை இணைப்பாளர் பேராசிரியர் வி.பி.சிவநாதன், பொது நிர்வாக கற்கை இணைப்பாளர் பேராசிரியர் வி. மணிவாசகர், சைவசித்தாந்த கற்கை இணைப்பாளர் கலாநிதி மா.வேதநாதன், முதுகல்விமாணி கற்கை இணைப்பாளர் கலாநிதி திருமதி ஜெ. இராசநாயகம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

அத்துடன் மாணவர்களின் விவாத அரங்கும் இடம் பெறஉள்ளது. (ஓ)

# வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம்

# ஜொலிஸ்ரார் , பற்றீசியன் அணிகள் இன்று இறுதிப் போட்டியில் மோதுகின்றன


2001ஆம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்.சென்றல் விளையாட்டு கழகம் 5ஆவது தடவையாக நடாத்திவரும் மேற்படி போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் பற்றீசியன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளருமாகிய B.A அருமைநாயகம் கலந்து கொள்வார்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி கால் இறுதிப் போட்டியில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழக அணியுடனும் அரை இறுதிப் போட்டியில் யாழ்.சென்றல் விளையாட்டு கழக அணியுடனும் மோதி வெற்றி பெற்றனர்.


பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி முதல் சுற்றில் அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணியுடனும் கால் இறுதிப் போட்டியில் ஸ்ரான்லி விளையாட்டு கழக அணியுடனும் அரை இறுதிப் போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணியுடனும் மோதி வெற்றிபெற்றனர்.

இவ் வெற்றிக் கிண்ணத்தை 2002ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகமும் 2003 ஆம் ஆண்டு மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழக அணியும் 2004ஆம் ஆண்டு பற்றீசியன் விளையாட்டுக் கழக அணியும் 2005ஆம் ஆண்டு யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் சுவிகரித்துக் கொண்டன.

யாழ். நகரிலே நடைபெறும் சுற்றுப் போட்டிகளில் ஐம்பது (50) பந்து பரிமாற்றங்களை கொண்ட சுற்றுப் போட்டி இச் சுற்றுப் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை சேர்ந்த அ. சேர்ச்சில் ஆகக் கூடிய ஓட்டங்கள் 160 ஐ பெற்று யாழ்.நகரிலே ஐம்பது (50) பந்து பரிமாற்றங்களை கொண்ட சுற்றுப் போட்டியில் ஆகக் கூடிய ஓட்டங்களைப் பெற்ற துடுப்பாட்ட வீரனாக திகழ்கின்றார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஓ)



**பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி**
இருப்பவர்கள்
இடம்-வலம்:- என்.பி.ரட்ணராஜா,(முகாமையாளர்), ரி.ஜெயமுகுந்தன், எ.எல்.சுஜீவன், REF.FR.M.ஜெரோசெல்வநாயகம் (தலைவர்) எ.ஆர்.சேர்ச்சில், டபிள்யூ.ஜெக்ஸன், எ.எஸ்.நிசாந்தன் (பயிற்றுனர்)
நிற்பவர்கள்:- பி.பத்மமுரளி, எஸ்.ஜெனன்ராஜ், எ.ஜெயந்திரன், ரி.லவதீசன், ஜெ.எவ்.கொலின், பி.நவதீபன், எம்.ஏ.நிலோஸன், வி.விதுபாலா, எஸ்.மிலாண்டோ ஜெனீபர்.



**ஜொலிஸ்ரார் விளையாட்டு கழகம்**
நிற்பவர்கள்:- கே.நாதன், பி.திவாகரன் ரி.கோசிகன், பி.லவகாந், எம்.துஜீபன்,
இ-வ :-ரி.சிவதாஸ், எஸ்.கோபிநாத், வி.நிதர்சன், கே.டிலக்ஸன்.
இருப்பவர்கள்:- எஸ்.சிறிபிரசண்ணா, என்.சிவராஜ், எஸ். பிரசண்ணா , என்.பகிரதன்.
இ-வ:-எஸ்.தயாளன்

## விஞ்ஞானபீட மாணவர்களுக்கான கற்றற் செயற்பாடுகள் நாளை ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட இரண்டாம்,மூன்றாம் ஆண்டு மாணவர் களது கற்றல் செயற்பாடுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும். காலை ஒன்பதரை மணிக்கு இடம் பெறவிருக்கும் கற்கை நெறி பற்றிய அறிமுக நிகழ்வில் இம்மாணவர்களை தவறாது பங்கு பற்றுமாறு விஞ்ஞான பீட,பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவேல் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி

யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் யாழ்.சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட நொக்கவுட் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு B பிரிவில் சென்மைக்கல் எதிர் ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும்(A), 4.45 க்கு C பிரிவில் சென்நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம்(A)எதிர் ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்(B) போட்டியிடவுள்ளன. (ஓ)

பயிர் செய்யும்போது ஒருவன் தனியாக உழைக்கிறான்; அறுவடை செய்யும்போது நண்பர்கள் சுற்றிவளைக்கிறார்கள்.
–அவுஸ்திரேலியா

வலம்புரி

## விவசாய-விலங்கு வேளாண்மை கண்காட்சி யாழ்ப்பாண விவசாயத்தை உய்விக்கட்டும்

யாழ்ப்பாணத்தில் மாபெரும் விவசாயக் கண்காட்சியை நடத்துவதற்கு விவசாயத் திணைக்கள விரிவாக்கற் பிரிவு, விவசாயத் திணைக்கள ஆராய்ச்சிப் பிரிவு, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம் என்பன இணைந்து நடத்த முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்க –பாராட்டவேண்டிய விடயமாகும்.

யாழ்ப்பாணத்தில் இத்தகையதோர் கண்காட்சியை நடத்தவேண்டுமென்ற தீர்மானத்தை கூட்டாக எடுத்தவர்களின் நன்நோக்கம் நிறைவேற ஊடகங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது கட்டாயமானதாகும்.

யாழ்ப்பாணத்தில் விவசாயம் மற்றும் விலங்கு வேளாண்மை என்பவற்றின் உற்பத்தி ஆக்கம் மிகவும் மந்தநிலையிலேயே உள்ளது.

இதனால் யாழ்.குடாநாட்டின் உற்பத்திப் பெருக்கம் மந்தமடைந்திருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

தென்னிலங்கையில் விவசாய – விலங்கு வேளாண்மை முயற்சிகளுக்கு அரசு வழங்கும் ஒத்துழைப்பு தாராளமானது.

இதனால் அங்கு விவசாய முயற்சிகளில் ஈடுபடும் மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை உயர்வு கண்டுள்ளதால் அங்கு விவசாயம் நோக்கிய ஊழிய நகர்வு முன்னேற்றம் கண்டுள்ளதெனலாம்.

ஆனால் யாழ்.குடாநாடு அரசினால் சபிக்கப்பட்ட பூமியாக இருப்பதால் இங்கு விவசாய முயற்சிகள் எதுவும் முன்னேற்றம் காணாது மந்தமடைந்துள்ளது.

இந்த மந்தநிலையை யாழ்ப்பாணத்தில் இயங்கும் விவசாயத் திணைக்களங்களும், கால்நடை உற்பத்தி அமைப்புக்களும், கமத் தொழில்சேவை நிறுவனங்களும் ஊக்குவிக்கின்றன என்ற குற்றச்சாட்டு பரவலாக இருந்த நிலையில் தற்போது மேற்கூறப்பட்ட அமைப்புக்களின் முகாமைகளும், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடமும் இணைந்து நல்லதோர் முயற்சியாக பிரமாண்டமான கண்காட்சியை நடத்த முன்வந்திருப்பது அவர்களின் சமூகப் பொறுப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.

மேற்படி கண்காட்சி யாழ்ப்பாணக் குடாநாட்டில் மந்தமடைந்திருக்கும் விவசாயத்தை தூக்கிவிட்டும். அருகிப் போகும் விலங்கு வேளாண்மைக்கு புத்துயிர் அளிக்கட்டும்.

இதுவே நலிந்துபோயுள்ள நம் மக்களின் மேன்மையடைய வழிகாட்டும்.

நடைபெறும் கண்காட்சியில் விவசாயப் பயிர்கள் மற்றும் கால்நடைகளின் விற்பனைகளும் களைகட்டி யாழ்ப்பாண விவசாயத்துக்கு குடமுழுக்கு நடத்தி புதியதோர் உத்வேகத்தை அளிக்க நாமும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

# இலங்கை மக்களின் உயர்வுக்கான அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உதவி வழங்கப்படும்

### சீன ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

ஒரே சீனா என்ற கொள்கையில் இலங்கை என்றுமே உறுதியாக உள்ளது. வரலாற்றுக் காலம் தொடக்கம் இரு நாடுகளுக்கிடையேயான உறைவையும் இலங்கை சார்பான கொள்கையையும் மறக்க முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீனாவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை பார்வையிட சீன ஜனாதிபதி இலங்கை வரவேண்டும் மென்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

பீஜி நகரில் இடம் பெறும் ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப விழாவில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை சீன ஜனாதிபதி ஹூ ஜின் தாவோவை சந்தித்து பேசியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதி இம்முறை ஒலிம்பிக் போட்டியை பிஜீங் நகரில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதையிட்டு சீன ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அண்மையில் சீனாவில் ஏற்பட்ட பூமியதிர்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது கவலையை தெரிவித்துள்ள தோடு 2004ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி பேரழிவின் போது இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்காக நன்றி தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஒற்றையாட்சிக் கொள்கையை இலங்கை என்றும் ஏற்றுக் கொள்கிறது. இலங்கையில் மேற்கொள்ளப் பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக தெளிவுபடுத்தியதோடு சீனாவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களை பார்வையிட வருகை தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த சீன ஜனாதிபதி ஹூ ஜின்தாவோ இலங்கையின் ஒருமைப்பாடு, சுயாதிபத்தியத்தை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் சீனா ஆதரவை வழங்கும் என கூறியுள்ளார்.

இரு தரப்பினரின் நல்லுறவு வலுப்பெற்று வருவதோடு ஏப்ரல் மாதம் நடைபெற்ற போவோ போரம் மாநாடு தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர். சீனாவுக்கும்–இலங்கைக்கும் வசதியான தினத்தில் தனது விஜயத்தை மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளதோடு.

இலங்கை மக்களின் உயர்வுக்காக முன்னெடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தி திட்டங் களுக்கும் உதவி வழங்கப்படுமென்றும் சீன ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஓ)

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்த வெளிச்சக்திகள் முயற்சி

### ஸ்ரீகாந்தா எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

சில வெளிச்சக்திகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவொன்றை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் சில ஊடகங்கள் விஷமத்தனமான பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாகவும் அக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சிறப்புரிமைப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர்,

தமிழ் ஊடகம் ஒன்றின் முன்பக்கத்தில் என்னைப் பற்றி உண்மைக்குப் புறம்பான செய்தி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது: கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற அவசர காலச் சட்ட நீடிப்பு வாக்கெடுப்பில் நான் பங்கேற்கவில்லை என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளதுடன் வாக்கெடுப்பு முடிந்த பின்னர் நான் சபைக்குள் வந்ததாகவும், சம்பந்தன் எம்.பி. என் மீது சீறிப் பாய்ந்ததாகவும் ஏனைய தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் என்னுடன் முகம் கொடுத்துக் கதைக்க வில்லை எனவும் அச் செய்தியில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அவசர காலச் சட்ட நீடிப்பு விவாதத்தின் போது நான் சபையிலிருந்தேன். எனது சக உறுப்பினர்கள் பேசியதால் எனக்குப் பேச நேரம் கிடைக்கவில்லை. அத்துடன் எனக்கு உடல் நலமும் சரியில்லை.

இதனை எமது கட்சி நாடாளுமன்ற கொறடா செல்வம் அடைக்கலநாதனிடமும் ஏற்கனவே தெரிவித்திருந்தேன். இதற்கிடையில் நான் ஒரு பத்திரிகையின் சபை நிருபரைச் சந்திக்க வேண்டியிருந்ததால் நான் அவரைச் சந்திக்கச் சென்ற வேளையில் இங்கே திடீரென வாக்கெடுப்பு நடத்தப்பட்டுவிட்டது.

வாக்கெடுப்பிற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

நான் நிருபருடன் உரையாடி விட்டு அதன் பின்னர் பத்திரிகையாளர் அறையில் இருந்ததால் வாக்கெடுப்புக்கான கோரம் ஒலித்ததும் எனக்குக் கேட்கவில்லை.

வாக்கெடுப்புக்கு குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு நான் சபைக்குள் வந்தபோது வாக்கெடுப்பு முடிபடைந்து விட்டது.

எனது நிலையை எமது நாடாளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தனிடம் தெரிவித்தேன். அதேபோல் சக உறுப்பினர்களிடமும் தெரிவித்தேன் என ஸ்ரீகாந்தா கூறி னார். (ந–5)

# நாட்டைக் கட்டியெழுப்பி நல்லாட்சி வழங்கக் கூடிய தலைவர் ரணில் மட்டுமே

### எஸ்.பி.திஸாநாயக்க புகழாரம்

நிறைவேற்று அதிகாரத்தினூடாக இந்த நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய அனைத்து சிறப்பம்சங்களும் பொருந்தியவராக ரணில் விக்கிரம சிங்க மாத்திரமே திகழ்கின்றார். அவரே உண்மையான தேசப் பற்றாளராக வும் இருக்கின்றார். இதனை கடந்த 2002 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அவர் நிரூபித்துக் காட்டியுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ். பி.திஸாநாயக்கா தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டி ருக்கின்ற அரச அக்கிரமங்கள் குறித்து ஐக்கிய தேசியக்கட்சியும் மேலக மக்கள் முன்னணியும் மாத்திரமே குரலெழுப்பிக் கொண்டிருக்கின்றனவே தவிர அரசுக்கு முண்டு கொடுத்துக்கொண்டிருக்கும் கட்சிகளுக்கு அது குறித்த அக்கறை இல்லையென்பதை செயலில் காட்டிக் கொண்டிருக்கின்றன எனவும் அவர் கூறினார். எதிர்க்கட்சி அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே எஸ். பி.திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில் பொருளாதார வீழ்ச்சியால் நாடு இன்று அதல பாதாளத்துக்குள்வீழ்ந்து கிடக்கின்றது உற் பத்தித்துறை, தேசிய அபிவிருத்தி அடிப்படை உரிமைகள் போன்ற அனைத்து விடயங்களும் பாழடைந்து விட்டன.

இதே நிலைமையே கடந்த 2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி நாட்டை பொறுப் பேற்றுக் கொண்ட போது காணப்பட்டது. அக் காலத்தில் வீழ்ச்சி யுற்ற பொருளாதாரம் மிக விரைவாகக் கட்டி யெழுப்பப் பட்டது. வெளி நாட்டு உறவுகளும் அதனூடான உதவிகளும் அதி கரித்திருந்தன.

தீர்க்கதரிசனமான ஒரு எதிர் காலத்தை உருவாக்கிக் கொடுத்த ரணில் விக்கிரம சிங்க நிறைவேற்றுஅதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இந்த நாட்டைஆட்சி செய்யவும் அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவும் தேவையான அனைத்து சிறப்பம்சங்களும் பொருந்தியவராக திகழ் கின்றார்.

மேலக மக்கள் முன்னணியின் ஐக்கிய தேசியக் கட்சிஆகியனவே தமிழ் மக்கள் படும் துன்பங்கள் குறித்து குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறன. ஐக்கிய தேசியக் கட்சியினூடாக பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்கள் இன்று அற்ப சுகங்களுக்காக அரசாங்கத்துக்கு வால் பிடித்துக் கொண்டிக்கின்றனர். நல்லாட்சி யொன்று அமைவதற்கு இன்றைய அரசாங் கத்தின் கூட்டு பொருத்தமானதாக இல்லை. வீழ்ச்சி கண்டுள்ள பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். நாட்டில் ஜனநாயகம் நிலை நிறுத்தப்பட வேண்டும். மக்களிடையே அந்நியோன்யம்மலரவேண்டும் நாடும் மக்களும் ஒன்றாக அபிவிருத்தியை காண வேண்டும். இதற்கான ஆளுமையும் அணுகுமுறையும் திடகாத்திரமான கொள்கையும் அதே வேளை உண்மையான தேசப்பற்றும் மிக மிக அவசியமானதாகும். இந்ததகுதிகளை கொண்டிருப்பவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே ஆவார். அவராலே யேஇந்நாட்டுக்குநல்லாட்சியை வழங்கமுடியும் அதனை அவர் நிரூபித்துக் காட்டியுள்ளார். (ஓ)

# அஞ்சாதே எந்தன் நெஞ்சமே

மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை கருவறை முதல் கல்லறை வரை பயந்து பயந்து அஞ்சி அஞ்சி வாழ்கின்றான்.

சில பேருக்கு சிலவற்றின் மீது பயம். இதை ஆங்கிலத்தில் போபியா என்று அழைப்பர் .அதன்படி சிலருக்குத் தண்ணீரைக் கண்டால் பயம்,இடித்தால் பயம் மின்னல் அடித்தால் பயம்... இத்தகைய பயம் அம்மனிதரின் உளவியல் சம்பந்தப்பட்ட நோய் .

அதே சமயம் கடவுள் பயமே ஞானத்துவக்கம் என்று சொல்வதன் பொருள் என்ன. இதன் பொருள் என்ன வென்றால் கடவுள் மீது மரியாதை கலந்த ஒரு பயம் இருக்கும் போது அது நம்மை தீய வழிகளிநின்று காக்கும். அதுதான் ஞானத்திற்கான வழி.

மனிதரின் பயமும் அச்சமும் அவர்களின் நம்பிக்கையின்மையின் வெளிப்பாடு. நம்பிக்கை இருந்தால் அங்கு அச்சத்திற்கு இடமில்லை. இயேசு நற்செய்தியில் இந்த நம்பிக்கையைப் பற்றி பல இடங்களில் பேசுகிறார். ஒவ்வொரு புதுமைக்கு குணமளிக்கும் செயலுக்கு முன்னும் இயேசு நீ விசுவாசிக்கிறாயா?

### பரமபிதா காட்டிய பாதை

என்று தான் முதலில் கேட்பார். அப்படி விசுவாசம் இல்லாத பட்சத்தில் குறைவான விசுவாச முள்ளவனே என்று கண்டிப்பார். இது பேதுருவின் வாழ்வில் பார்க்கின்றோம். பேதுரு கடல் மீது நடந்து வரும் போது பயந்து போய் மூழ்கையில் இயேசுவைப் பார்த்துஆண்டவரே நான் மூழ்கப் போகிறேன் என்று கத்துவார். அப்போது இயேசு குறைவான விசுவாசம்




உள்ளவனே ஏன் தயங்கி னாய்? என்று கேட்பார். இது தான் இன்றைய நற்செய்தியில் சொல்லப்படுகின்றது. நம்முடைய நிலை என்ன இன்று நாம் யாருக்கு பயப்படுகின்றோம்? நன் மைக்கா? தீமைக்கா? அலகைக்கா? ஆண்டவனுக்கா?அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா என்ற பாடலின் வரிகளுக்கேற்ப அச்சத்தை விடுத்து ஆண்டவரில் நம் பிக்கை கொள்வோம்.

ஜோன் ரொபேர்ட்

# மரண அறிவித்தல்

மண்ணில் 22 11 1942



விண்ணில் 06 08 2008

## போடியார் முருகுப்பிள்ளை ஆறுமுகசாமி (பங்கர் அப்பா)

(ஊறணி– வல்வெட்டித்துறை)

[முன்னாள் வல்வைப்புடவை மாளிகை முதலாளியும் தற்போதைய Ocean Wealth (ஓசன் வெல்த்) உரிமையாளரும் Marine Wealth (Sri Lanka), Marine Wealth.Ing (Canada)ஆகிய ஸ்தாபனங்களின் ஸ்தாபகரும்]

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், ஊறணி வல்வெட்டித்துறையை வதிவிடமாகவும் கொண்ட போடியார் முருகுப்பிள்ளை ஆறுமுகசாமி (பங்கர் அப்பா) அவர்கள் 06.08.2008 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் முருகுப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், சுந்தரலட்சுமியின் அன்புக் கணவரும், வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளையின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி, நகுலேஸ்வரன், தங்கராணி, தேவராணி, மகாதேவி, ஆனந்தநாயகி,காலஞ்சென்ற பத்மாவதி, தனராஜன், நவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலம் சென்ற சுப்பிரமணியம், துஷ்யந்தி, இந்திரலிங்கம், விஜயநாயகம், லவகுமார், ஜெயகாந்தன், கங்கா, பிரியந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ் சென்றவர்களான நாகரத்தினம், இராமலிங்கம், தங்கரத்தினம் ஆகியோரினதும் செல்வரத்தினம், வள்ளியம்மாவினதும் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் வீரலட்சுமி, காலஞ்சென்ற தேவசிகாமணி, சிவனடியார், கந்தசாமித்துரை,பூரணலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும்.

முகுந்தன், விஜிதா, சகுந்தலா, ரமணன், ஜெகன், நிஷாந்தி, ஷகானா, ராகவன், ராகுலன், சிந்துஜன், விதுஷன், ரீஷா, காவேரி ஆகியோரின் அன்புப் பேரனும் சிவத்திரா, துஷாயினி, சிவறிஷா, மதுஷா, சிவாஸ், கிருஸ்ணி, தமிழினி, ஆதி ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.08.2008 புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஊறணி,
வல்வெட்டித்துறை.

தகவல்
குடும்பத்தினர்.

(1524)

# துப்பாக்கி சுடும் போட்டியில் செக் குடியரசுக்கு முதல் தங்கம்

(பீஜிங்)

உலகின் மிகப் பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி சீனத் தலைநகர் பீஜிங்கில் நேற்று முன்தினம் கோலாகலமாக ஆரம்பமானது.



200க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 10 ஆயிரத்து 700 வீரர், வீராங்கனைகள் இதில் பங்கேற்கின்றனர்.

மொத்தமாக 28 விளையாட்டுக்களில் 302 பிரிவுகளில் பதக்கங்கள் வழங்கப் படுகின்றது.

29-வது ஒலிம்பிக்கில் நேற்றுமுதல் போட்டிகள் நடக்கின்றன.

இந்த ஒலிம்பிக்கில் முதல் தங்கப்பதக்கம் செக் குடியரசு நாட்டுக்கு கிடைத்தது. முதல் தங்கம் வென்ற பெருமை அந்த நாட்டைச் சேர்ந்த கத்ரினா எம்மான்சுக்கு கிடைத்தது.

பெண்களுக்கான 10 மீற்றர் கைத் துப் பாக்கிப் பிரிவில் அவர் தங்கப்பதக்கம் பெற் றார்.

24 வயதான கத்ரினா 503.5 புள்ளிகள் பெற்றார்.தகுதி சுற்றிலும் இறுதி சுற்றிலும் அவர் புதிய ஒலிம்பிக் சாதனை படைத் தார்.

2004ஆம் ஆண்டு ஏதென்ஸ் ஒலிம்பிக் கில் சீனாவைச் சேர்ந்த டியூ லீ 502 புள்ளி கள் பெற்றதே சாதனையாக இருந்தது.

அத்தோடு கத்ரினா உலக சாதனையை யும் சமன் செய்தார். ரஷ்ய வீராங்கனை லியோ போவ் சால்சினா 502 புள்ளிகள் பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

குரோஷியாவுக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது. அந்த நாட்டைச் சேர்ந்த பெஜிசிக் 500.9 புள்ளிகள் பெற்றார்.


10 மீற்றர் கைத் தூப்பாக்கிப் பிரிவில் இந்தியா சார்ப்பில் அஞ்சலி பகவத், அவ்னீத் தவூர்சித்துவும் பங்கேற்றனர்.

இருவரும் மிகுந்த ஏமாற்றத்தை கொடுத் தனர். இருவரும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறவில்லை.

அஞ்சலி (393 புள்ளிகள்) 29 இடத்தை யும் அவ்னித் தவூர் (389) புள்ளிகள் 39-வது இடத்தையும் பெற்றனர்.


# சைக்கிள் ஓட்டத்தில் ஸ்பெயின் தங்கம் வென்றது

(பீஜிங்)



சீன ஒலிம்பிக் போட்டிகளில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சாமுவல் சான்ஷெஸ் 245 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்று முதலாவது பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

பல முன்னணி சைக்கிளோட்ட வீரர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கடுமையான வெப்பம், புளுக்கம் காரணமாக போட்டியில் இருந்து பாதியில் விலகினார்கள்.



நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியின் போது...


## வலம்புரியின் ஒலிம்பிக் உலா

Beijing 2008

# பெண்கள் பளுதூக்கலில் சீனாவுக்குத் தங்கம்

(பீஜிங்)

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் நேற்று காலை பெண்களுக்கான பளுதூக்கும் போட்டி நடந்தது.




இதில் சீனாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத் தது.

ஜியாசியசென் 212 கிலோ தூக்கி முதலி டத்தைப் பிடித்தார். அவர் ஸ்னாட்ச் முறை யில் 95 கிலோவும் கிளின் அன்ட் ஹிக் முறை யில் 117 கிலோவும் தூக்கினார்.

துருக்கியைச் சேர்ந்த சிபெல் ஒஸ்கான் வெள்ளிப்பதக்கம் பெற்றார். அவர் 199 கிலோ தூக்கினார்.

சீன தாய்வானைச் சேர்ந்த லிங்வீ சென் 196 கிலோ தூக்கி வெண்கலம் பெற்றார்.

# வாள் சண்டையில் அமெரிக்காவுக்கு 3 பதக்கம்

(பீஜிங்)

நேற்று நடந்த பெண்களுக்கான வாள் சண்டை தனிநபர் பிரிவில் அமெரிக்காவின் மரியல் ஜாக்யுனிஸ் தங்கம் வென்றார்.

மற்றொரு அமெரிக்க வீராங்கனை சதா ஜேக்கப்சன் இரண்டாவது இடம் பெற்று வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

வெண்கலப் பதக்கத்தை அமெரிக்கா வின் பெக்கா வார்ட் வென்றார்.

இப்பிரிவில் மூன்று பதக்கங்களையும் அமெரிக்க வீராங்கனைகள் தட்டிச் சென்று பதக்கப்பட்டியலில் இடம் பிடித்தனர்.

# சங்கக்கார சிறப்பான சதம்; இலங்கை முன்னிலை பெற்றது

(கொழும்பு)

குமார் சங்கக்காரவின் பொறுப்பான சதத்தின் மூலம் இலங்கை அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 6 விக் கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களை எடுததிருந்தது.

இதன் மூலம் இந்திய அணியை விட இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 2 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இந்திய அணி; 3 டெஸ்ட், 5 ஒரு நாள்போட்டிகள் கொண்ட தொடரில் விளை யாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் இலங்கை அணியும் இரண்டாவது டெஸ்டில்இந்திய அணியும் வெற்றி பெற்று தொடரில் சமநிலை யில் உள்ள நிலையில் மூன்றாவது டெஸ்ட் நேற்று முன்தினம் கொழும்பு பி.சரவண முத்து மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி; அதன் முதலாவது இன்னிங் ஸில் 249 ஓட்டங்களை எடுத்து சகல விக் கெட்டுக்களையும் இழந்தது.

இதில் காம்பீர் 72 ஓட்டங்களையும் கங் குலி 35 ஓட்டங்களையும் சகீர்கான் 32 ஓட் டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மெண்டிஸ் 5 விக்கெட்டுக்க ளையும் பிரசாத் 3 விக்கெட்டுக்களையும் மற் றும் முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி; நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 14 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 42 ஓட்டங்களை எடுத்தபோது இரண்டாவது விக் கெட்டுக்காக வான்டொட் 14 ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய குமார் சங்கக் கார பொறுப்புடன் துடுப்பெடுத்தாடினார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய சமிந்த வாஸ் ஓட்டங்களைக் குவித்தார்.

இந்த ஜோடியை பிரிக்க இந்திய அணித் தலைவர் கும்ளே பல வியூகங்களை வகுத்த போதும் பலனளிக்கவில்லை.

சிறப்பாக ஆடிய சங்கக்கார தனது அரைச் சதத்தைக் கடந்தார்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக் காக 95 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது சமிந்தவாஸ் 47 ஓட்டங்களு டன் ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் சேவாக் கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 2 ஓட்டங்களை மாத்திரம் எடுத்த நிலையில் ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்ட மிழந்தார்.

எனினும் நடுவரினால் வழங்கப்பட்ட இவ் ஆட்டமிழப்பை ஏற்க மறுத்த மஹேல ஜெய வர்த்தன 3-வது நடுவரிடம் மேன்முறையீடு செய்தபோது பலனளிக்கவில்லை.

அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இலங்கை அணிக்கு தொடர்ந்து களமிறங்கிய திலான் சமரவீர ஆறுதலளித் தார்.


ஒருமுனையில் சங்கக்கார ஓட்டங்களை எடுக்க மறுமுனையில் திலான் சமரவீர நிதா னமாக ஆடினார்.

எனினும் திலான் சமரவீர 35 ஓட்டங் களைப் பெற்றபோது சகீர்கானின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பட்டேலிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய டில்சான் நிதான மாக ஆட மறுமுனையில் குமார் சங்கக்கார தனது 17-வது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய் தார்.

இலங்கை அணி 244 ஓட்டங்களை எடுத்த போது டில்சான் 23 ஓட்டங்களுடன் கும்ளே யின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

நடுவரின் இவ்வாட்டமிழப்பு தீர்ப்பை ஏற்க மறுத்த டில்சான் 3-வது நடுவரிடம் மேன் முறையீடு செய்தபோதும் பலனளிக்கவில் லை.



அடுத்து சங்கக்காரவுடன் ஜோடி சேர்ந் தார் பிரசன்ன ஜெயவர்த்தன. இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் இலங்கை அணி 6 விக்கெட்டுக் களை இழந்து 251 ஓட்டங்களை எடுத்திருந் தது.

களத்தில் குமார் சங்கக்கார 107 ஓட்டங் களுடனும் பிரசன்ன ஜெயவர்த்தன ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் சகீர்கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா, கும்ளே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# இலங். கடற்படையினருடன் கூட்டு ரோந்து தொடரும்

## இந்திய கடலோரக் காவல் படை தெரிவிப்பு

இந்தியக் கடல் எல்லையில் இலங்கைக் கடற்படையினருடன் கூட்டு ரோந்துப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என இந்தியக் கடலோரக் காவல் படையின் தென்பிராந்தியத்திற்கான பொறுப்பதிகாரி பாத்ரா தெரிவீத்துள்ளார்.

கடலோரக் காவல்படையினரின் பாதுகாப்பு மற்றும் கூட்டு ரோந்து தொடர்பாகத் தமிழகம் உச்சிப்புளியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சட்ட விரோத கடத்தல்கள் மேற்கொள்ளப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் கடலோரப் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக அவர் இங்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையை அண்மித்த பாக்கு நீரிணை மற்றும் மன்னார்க் கடற்பகுதியில் இந்தியக் கடலோரக் காவல்படையினரும் விமானப் படையினரும் இணைந்து தற்போது கூட்டு ரோந்து பணியை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தியக் கடல் எல்லையில் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் தாம் மேற்கொள்வதாகவும் இந்தியக் கடலோரக் காவல் படையின் தென்பிராந்திய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய மீனவர்கள் சர்தேச கடல் எல்லையைத் தாண்டிச்சென்று மீன்பிடிப்பில் ஈடுபடும்போதே பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ந-5)

## புலிகளின்...

மணிக்கும் புதுக்குடியிருப்புக்கு வடக்கேயுள்ள இரணைப்பாலையில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தளம் ஒன்றின் மீது நேற்றுக் காலை 9.45 மணிக்கும் விமானப் படையினர் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி அந்தத் தளங்களை அழித்திருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சுக் கூறியிருக்கின்றது.

பூநகரிப் பகுதியிலுள்ள நாகதேவன் துறைக்கு அருகில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் கண்காணிப்பு நிலையத்தையும் அதனோடிருந்த படகுகள் நிறுத்தும் இடத்தையும் விமானப் படையினரின் எம்.ஐ.-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகள் குண்டு வீசி தாக்கியழித்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ந-5)

## ஐ.நா. ஊடாக போர் நிறுத்...

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹனவிடம் தெரிவித்துள்ளதாகவும் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஆனால், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் எனும் கோரிக்கை தொடர்பில் மௌனமாக இருந்து வருவதாகவும் அரசாங்கம் விடுதலைப் புலிகளின் இந்த வேண்டுகோளை நிராகரித்து விட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் விடுதலைப் புலிகள் பாரிய இராணுவ ரீதியான அழுத்தங்களை எதிர்நோக்கியிருப்பதன் காரணமாகவே போர் நிறுத்தத்திற்கு முயற்சிப்பதாகவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பிடியிலுள்ள மக்களை மீட்டெடுப்பதற்கு தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கையைத் தவிர வேறுவழி இல்லையென்றும் அவர் கூறியுள்ளார். (ந-ஓ)




# பயங்கரவாதத்தை முடிபுறுத்தும் இறுதிக் கட்டத்தில் படையினர்

## பிரதமர் கூறுகிறார்

(கொழும்பு)

பயங்கரவாதத்தை முடிபுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தில் படையினர் இருப்பதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மெதிரிகிரிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரம் ஒன்றில் உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

பயங்கரவாதம் தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே பயங்கரவாதத்தை முடிபுக்குக் கொண்டு வருவதற்கான இறுதிக்கட்டத்தில் இருக்கும் படையினரின் நடவடிக்கைகளுக்கு வேலை நிறுத்தப் போராட்டம் போன்ற நடவடிக்கைகளைக் கைவிட்டு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுள்ளார். (ந-5)

# வடக்கு மோதல்களில் 17 புலிகள் கொல்லப்பட்டுள்ளனராம்

(கொழும்பு)

வடக்கில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பல்வேறு மோதல்களின்போது 17 புலிகள் கொல்லப்பட்டும் 38 பேர் காயமடைந்தும் உள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் அறிவித்துள்ளது.

மணலாறு, வவுனியா ஆகிய பிரதேசங்களில் இம் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதன்போது 4 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 16 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை மோதல் இடம்பெற்ற பிரதேசங்களில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது புலி உறுப்பினர் ஒருவருடைய சடலம், ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்று மற்றும் மகசின்கள் 2 என்பவற்றைப் படையினர் மீட்டுள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# கடமைகளைப் பொறுப்பேற்றார் வட மாகாண ஆளுநர் விக்டர் பெரேரா

(திருகோணமலை)

வடமாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மாஅதிபர் விக்டர் பெரேரா நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கெண்டார்.

திருகோணமலையில் அமைந்துள்ள வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இதற்கான நிகழ்வுகள் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்றது.

கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட வட மாகாணத்தின் புதிய ஆளுநர் விக்டர் பெரேரா மாகாணத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சகல அதிகாரிகளினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி தன் மீது வைத்த நம்பிக்கையைப் பாதுகாக்கும் முகமாக எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுத்து வெற்றி பெற்று மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## பிரித்தானிய...

காகவே பிரித்தானிய அதிகாரிகள் இந்த விஜயத்தை மேற்கொண்டுள் ளனர் என்றும் வன்னிப் பிரதேசத்திற்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெகத் ஜெயசூரியவை மார்க் குடிங் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய இராணுவ முன் நகர்வுகள், அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள சிவிலியன்களின் நிலைமை, இடம்பெயர்ந்த மக்களது நிலைமை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ந-5)

## மடு மாதா திருச்சொரூபம்...

வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக் கது.

மடுத் தேவாலயப் பிரதேசத்தை இராணுவம் புலிகளிடமிருந்து கடந்த ஏப்ரல் மாதம் கைப்பற்றியதையடுத்து சேதமடைந்திருந்த ஆலய கட்டடங்களைத் திருத்தியமைத்த இராணுவத்தினர் சில தினங்களுக்கு முன்னர் திருச் சபையினரிடம் கையளித்திருந்ததையடுத்தே மன்னார் ஆயர் இல்லத்திலிருந்த மடு அன்னையின் திருச்சொரூபம் நேற்று அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

திருப்பலி மற்றும் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்காக மடு ஆலயத்தை புனிதமாக்கும் சடங்குகளில் பங்குபற்றுவதற்காக நாளை திங்கட்கிழமை குருமார்கள் அங்கு செல்ல இருப்பதாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்திருப்பதாக யாழ்.ஆயர் இல்ல செயலாளர் வண. பிதா எஸ்.ஜே.றொசான் குறிப்பிட்டார்.

இதேவேளை மடு ஆவணி திருநாள் இவ்வருடம் நடைபெற மாட்டாது என மன்னார் ஆயர் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு...

ஐ.நா. சபையின் அகதிகளுக்கான நிறுவனத்தின் (யு.என்.எச்.சி.ஆர்.)பேச்சாளர் றொன் றெட் மொன்ட் இதனை ஜெனீவாவில் வைத்துத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசினதும் படையினதும் தடைகள் காரணமாக வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி புரிய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. அங்கு இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களுக்கான உதவிகள் புரிவதற்குத் தம்மிடம் தேவையான பொருள்கள் இல்லை என ஐ.நா. சபையின் அகதிகளுக்கான நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு, குடிநீர், சுகாதார உபகரணங்கள், தற்காலிக குடில்கள், எரிபொருள் என்பன தமது கையிருப்பில் மிகவும் குறைவடைந்திருப்பதாகவும் இவற்றை விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களுக்குள் கொண்டு செல்வதற்குப் படையினரால் விதிக்கப்பட்டுள்ள கடுமையான தடைகள் காரணமாக தமது கையிருப்பை மீள் நிரப்ப முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஜெனீவாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான நிறுவனத்தின் பேச்சாளர் றொன்றெட் மொன்ட் இத் தகவலைத் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த ஜூலை மாதம் மாத்திரம் 12 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 60 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்திருப்பதாக யு.என்.எச்.சி.ஆர். அமைப்பு கணித்துள்ளது. மனித நேயப் பணியாளர்களின் பாதுகாப்பை இந்தப் பகுதியில் உறுதிப்படுத்த முடியாதுள்ளதால் மனித நேயப் பணிகளை முன்னெடுக்க மிகவும் மோசமான பகுதி என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஐ.நா. சபை ஜெனீவாவில் விடுத்த இச் செய்தியினால் இலங்கை அரசுக்கு சர்வதேச ரீதியில் கடுமையான அழுத்தம் ஏற்படும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் வன்னிப் பகுதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை அனுப்பி வைத்திருப்பதாக இராணுவம் அண்மையில் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.